





ஸ்ரீராமாநுஜன் 100

வருடச்சந்தா 5 ரூ

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம் 100

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு * உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண் டமர்ந்திடவேண்டி * நின்பாலதுவே
யீந்திடவேண்டு மிராமாநுச ! இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனிமற்றொன்றுகாட்டி மயக்கிடலே.

(இதன் உரையை உள்ளே காண்க.)

ஆசிரியர் :

P. B. அண்ணங்கராசாரியர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

சதாபிஷேக மலர்.

தானே எழுதிய தன் சரிதையில் நான்காவது பகுதியின் ஒருபாகம்.

1957௵ ஏப்ரல்௴ ஹேவிளம்பி௵ சித்திரை௴

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 100

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் மாதவெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 9 ‖ ஹேவிளம்பி௵ சித்திரை௴ 1957 ஏப்ரல்௴ ‖ இதழ் 4

இம்மலருக்கான பாசுரத்தின் கருத்தைச் சிறிதநுபவிப்போம்.

[*போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு இத்யாதி.]

பகவத் ராமாநுஜ பக்தாக்ரேஸரரான திருவரங்கத்தமுதனார் தம்முடைய திருவுள்ளத்தை ஒரு வண்டாக ரூபணம் செய்கிறார். வண்டுக்கு மதுவ்ரதமென்றும் மதுபமென்றும் பெயரன்றோ. மதுவையே பருகிக் களிக்கும் அது. இந்த வண்டு எந்த மதுவைப் பருகிக் களிக்குமென்னில்; [ஒண்சீராந் தெளிதேனுண்டமர்ந்திடவேண்டி.] எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்களாகிற தெளிந்த தேனைப்பருகிக் களிக்குமாம். "உனதடிப்போதில்" என்பது காகாக்ஷிந்யாயேந மத்யம தீபந்யாயேந வா முன்னும் பின்னும் அந்வயிக்கவுரியது. முன்னே அந்வயித்தால் 'என்னெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப்போதில் போந்தது' என்றதாம். பின்னே அந்வயித்தால் 'உனதடிப்போதிலொண்சீராந்தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டிப் போந்தது' என்றதாம். எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளிலே திகழும் திருக்குணங்கள் எவை யென்னில்; பாவநத்வ போக்யத்வங்கள் ப்ரஸித்தமானவை. எம்பெருமானால் 'க்ஷிபாமி' என்றும் 'ந க்ஷமாமி' என்றும் நிக்ரஹிக்கப்பட்டவர்களையுங்கூட விஷயீகரித்து ரக்ஷித்தருளுகை முக்கியமான திருக்குணம். அது பரமபோக்யமான திருக்குணமாதலால் தெளிதேனாகச் சொல்லப்பட்டது.

இதற்குமேல் 'நின்பாலதுவே யீந்திடவேண்டும்' என்றும் 'இதுவன்றியொன்றும் மாந்தகில்லாது' என்றும் 'இனி மற்றொன்றுகாட்டி மயக்கிடலே' என்றும் அருளிச்செய்தவற்றால் வ்யாவர்த்திக்கப்படுமது எதுவென்னில்; எம்பெருமானார் தம்முடைய திருவடிகளைப் பணிந்தவர்களுக்கு எம்பெருமானுடைய திருவடித்தாமரையைக் காட்டிக்கொடுப்பதொன்று உண்டாகையாலே அங்ஙனே காட்டிக்கொடுக்க வொண்ணாதென்கை. இதனால் தம்முடைய திடமான அத்யவஸாயம் தெரிவிக்கப்பட்டதாகும். ஆசார்யன்திருவடிகளை பகவத்பாதாரவிந்த ப்ராப்திக்கு ஸாதனமாகப் பற்றுகையன்றிக்கே ஸ்வயம் உபேயமாகப் பற்றுகை விலக்ஷண நிஷ்டை என்பது இங்கு அறியத்தக்கது. ... ... *

சதாபிஷேகம்.

நமது ஸ்ரீராமாநுஜனுடைய இவ்விதழ் நூறாவதுலக்கம் பூண்டு வெளிவருதலால் இதனை சதாபிஷேக மலர் என்றிட்டு வெளியிடுகின்றோம். இப்பத்திரிகைக்கு நூற்றாண்டு முடிவு பெற்றுக் காண்பதென்பது நம்முடைய ஜீவிதத்தில் அரிது. இங்ஙனே நூறு நூறாகக் கழியும் ஸங்க்யா பர்யாயங்கள் சிலவற்றைக் காண பகவத் பாகவத க்ருபைவாய்க்கவேணும். உலகில் நடைபெறும் பத்ரிகைகள் எண்ணிறந்தவை. அவ்வவற்றுக்கு அனேகவிதமான ஸௌகர்யங்கள் அமைந்திருப்பதுண்டு. நமது பத்திரிகைக்கு எம்பெருமானாருடைய நிரவக்ரஹமான

அநுக்ரஹமொன்றே நிலைநின்ற ஸௌகர்யம். தமது திருநாமம் பூண்டு வெளிவருகின்ற விதனை விச்சிந்நமாக்கத் தகாதென்று திருவுள்ளம்பற்றிய எம்பெருமானர் தாமே இதனை நடத்திக் கொண்டு போருகிறார்.

திருப்பாவை விசேஷார்த்தவுரை பதினைந்து பாட்டு வரைக்குமே வெளிவந்திருப்பதனல் அதன் சேஷபூர்த்தியைப் பலர் எதிர்பார்த்திருக்கக் கூடும். தேசிக ஸ்தோத்ர வியாக்கியான சேஷத்தையும், கம்பரின்பக் கவித்திரட்டின் சேஷத்தையும் பலர் எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனலும், இதில் தன்சரிதையின் நான்காவது பகுதி வெளிவருகின்றது. இதுவும் ஸாவசேஷமாகவே நிற்கின்றது. க்ரமேண எல்லாம் நிரவசேஷமாகும். ரஸபேதங்களை விரும்புமவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருமிவ்வடைவு. ... ... (*)

ப்ரஹ்மஸ்ரீ. நூரணி. அனந்தக்ருஷ்ண சாஸ்திரிகளவர்களின் கடிதம்.

அனந்தக்ருஷ்ணசாஸ்த்ரி C/o, ராவ்ஸாஹிப். S. R. க்ருஷ்ணமூர்த்தி,

33. தெற்குமாடவீதி, மைலாப்பூர், மதராஸ்-4.

ஸ்ரீ. உ. வே. P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு அநேக நமஸ்காரங்கள். உபயகுசலோபரி. தங்களுடைய சதபூஷணீகுடாரம் மேஷஸங்க்ராந்திதினம் கிடைத்தது. மிகவும் ஸந்தோஷம். அதற்கு ஸமாதானம் எழுதுகிறேன். 4-நாளில் ஸம்ஸ்க்ருதத்தில் தங்களிடம் சேரும். இந்த லட்டர் கண்டவுடன், என் ஸ்னேஹிதர்கள் 4-பேர்கள் தங்கள் தமிழ் குடாரம் அபேக்ஷிக்கிறார்கள். இந்த லட்டர் கண்டதும் இந்த லட்டரின்மேல் குறித்த அட்ரஸ்ஸுக்கு 4 புஸ்தகம் அனுப்பவும். தங்கள் க்ஷேமஸமாசாரத்திற்கும் மற்றும் லட்டர் எதிர்பார்க்கிறேன். நாளை பாலக்காடு போகிறேன். இப்படிக்கு,

தங்களிஷ்டன் அனந்தக்ருஷ்ண சாஸ்திரி.

இதில் கண்ட ஸமாதான லேகத்தை மிகுந்த குதூஹலத்துடன் எதிர்பார்க்கிறேன். அதை எதிர்பார்த்தும் இப்பத்ரிகையை வெளியிடச் சிறிது தாமதித்தேன்.

இப்படிக்கு,

பத்ராதிபர். P. B. A. (14-5-57)

இம்மாதத்தில் சந்தா செலுத்தியவர்கள்.

49. T. R. மணவாள அய்யங்கார், காரைக்குடி.
50. D. ரங்காச்சார், வக்கீல், செங்கல்பட்டு
51. S. அப்பன், நல்லகவுண்டன்பாளையம், கோயப்புத்தூர்.
52. வடுகநம்பி ராமானுஜாச்சாரியார், B.Sc., பீர்வால்.
53. S. பத்மநாப அய்யங்கார், மதுரை.
54. புக்குட்டு ஜானகி அம்மாள், ஆழ்வார் திருநகரி.
55. கோதகுட்டியம்மாள், சிங்கப்பெருமாள்கோவில்.
56. T. ராஜமய்யங்கார், திருவையாறு.
57. முகுந்த ராமானுஜதாஸர், மாறப்பட்டி.
58. K. S. பலராமன், அம்மையப்பன்,
59. அழகுராமானுஜன், மதுரை.
60. ஆயி. நரஸிம்மாச்சாரியர், ஸ்ரீரங்கபட்டணம்.
61. V. தீனதயாளு நாயுடு, ஸ்ரீனிவாஸநகர். மதராஸ்,
62. R. ஆராவமுதய்யங்கார், அட்வகேட், அடையார், மதராஸ்.
63. S. கிருஷ்ணசாமி அய்யங்கார், மேட்டூர் டியாம், சேலம்.
64. தி. அ. கமலம்மாள், காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

தானே யெழுதிய தன்சரிதை

— நான்காம் பகுதி —

[ஸிம்ஹாவலோகநந்யாயேந கீழ்நோக்கிச் சில விண்ணப்பங்கள் செய்தல்]

ஆப்தநண்பர்களே! மூன்றாம் பகுதியை முடித்து வெளியிட்டு வெகு மாதங்களாயின. சென்ற கார்த்திகை மாதத்திலேயே நான்காம் பகுதியை யெழுதி முடித்து வெளியிடுவதாயிருக்கையில் எதிர்பாராமல் வேறுவகையான காரிய நிர்ப்பந்தங்கள் தவிர்க்க முடியாதபடி நேர்ந்தன. அதைப்பற்றி மேலே தெரிவிக்கலாகும். ஸம்வத்ஸராதியாகிய (1—4—57) இன்றுதான் நான்காவது பகுதியை எழுதத்தொடங்கலாயிற்று. இடையில் பத்தெட்டு மாதங்களுக்குமேல் கடந்து விட்டன. இப்படி தெய்விகமாக நேர்ந்த தாமதத்தில் நேர்ந்தவொரு மகிழ்ச்சிச் செய்தியை ஆப்தர்களிடம் விஜ்ஞாபனம் செய்யாமலிருக்க முடியவில்லை. குதூஹலத்தோடு விஜ்ஞாபனம் செய்கிறேன். பல நூற்றுக்கணக்கான பெரியார்கள் "தன்சரிதையில் நான்காவது பகுதியை ஏன் இன்னும் வெளியிடவில்லை. ஒவ்வொரு மாதத்திலும் ஆவலோடு அதை யெதிர்பார்த்து ஏமாற்றமடைந்து நிற்கிறோம்" என்றெழுதுபவர்கள் பலர். "தன்சரிதையை மூன்றாவது பகுதியோடு முடித்துக் கொண்டதாகத் தெரிகிறது; நான்காவது பகுதியையும் விரைவில் வெளியிட்டே யாகவேண்டும்" என்று தெரிவிப்பவர்கள் பலர். "தன்சரிதையில் நான்காவது பகுதி வெளியிடப்பட்டே யிருக்கும்; ஆனால் அது எமக்குக் கிடைக்கவில்லை. உடனே அனுப்பச் செய்ய வேணும்" என்று நியமிப்பவர்கள் பலர். இந்த வகைகளில் மற்றும் எத்தனையோ வகையாக ஸ்ரீமுகங்கள் ஸாதித்திருப்பவர்கள் பல நூற்றுக்கணக்கில் தேறுவர்கள். 'இந்தத் தன்சரிதையைக் கண்ணெடுத்தும் பாரார்கள்' என்று எந்தெந்த மஹான்களையிட்டு நாம் எண்ணியிருந்தோமோ அந்த மஹான்களுங்கூட மேலே தெரிவித்தபடி ஸ்ரீமுகங்கள் ஸாதிக்கப்பெற்றோம்.



(தன்சரிதையாளர்)

பல மஹான்கள் கடிதங்களெழுதாமல் நேரில்காண நேர்ந்தபோது "தன்சரிதையை முடிக்காமலே யிருக்கிறதே, என்ன காரணம்?" என்று கேட்பதுண்டு; அவர்களுக்கு அடியேன் விடுத்த விடை; 'பூர்வாசாரியர்களின் சரிதைகளை எவ்வளவு விரிவாகவெழுதி வெளியிட்டாலும் பயனுண்டு: இந்த அல்பனுடைய சரிதையை முடித்தாலென்ன? இடையில் விட்டிட்டாலென்ன? இதில் என்ன

விசாரம்?' என்பதே. இதற்கு ஒவ்வொருவரும் ஸாதித்தது ஏகரீதியாயிருந்தது; (அதாவது) "அப்படிச் சொல்ல வேண்டாம்; பூர்வாசாரியர்களின் வைபவ ப்ரக்ரியை ஒரு விதமானது; இது ஒரு விதமானது. இதிலிருந்து அனேக விஷயங்கள் தெரிந்து கொண்டு உள்ளம் பூரிக்க ப்ராப்தமாகிறது. நான்கு பகுதிகள் என்று ஓரளவிலே நிறுத்தாமல் எத்தனை பகுதிகள் எழுதி வெளியிட்டுக் கொண்டே போனாலும் ருசி சிறிதும் குன்றாமல் பார்த்துக் கொண்டே போக ஆவல் கொண்டிருப்பவர்களே அதிகம் என்பதை நன்கறிந்து சொல்லுகிறோம்" என்றே அவரவர்கள் சொல்லக் கேட்டபடி. இதிலிருந்து அடியேனுக்கு உண்டான மகிழ்ச்சியின் மிகுதியை என்னவென்றெழுதுவது? இது டம்பார்த்தமாக எழுதிக் கொண்டதன்று; உள்ளே அடக்கி வைத்துக்கொள்ள முடியாத ஸந்தோஷாதிசயமே இத்தனையும் எழுதி வைத்தது.

இடையில் இரண்டு சோகஸம்பவங்கள். (1) இத் தன்சரிதை முதற்பகுதியின் முடிவில் (பக்கம் 75ல்) திருவல்லிக்கேணி வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் பெருமைகளை விளக்கியிருந்தேன். (2) மூன்றாம் பகுதியில் (பக்கம் 213ல்) ஸ்ரீமத் திருமலை அத்தங்கி தெட்டு தாதாசார்ய ஸ்வாமியின் பெருமைகளை விளக்கியிருந்தேன். இவ்விரு மஹான்களும் இவ்விபூதியை விட்டு அகன்ற விஷயம் சோசநீயமானது. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளினது ப்ராப்தகாலமென்று ஒருவாறு ஆறுதலடையலாம். தெட்டு தாதாசார்ய ஸ்வாமி இன்னும் இருபதாண்டு எழுந்தருளியிருக்கலாம்; இம்மண்ணுலகின் பாக்கியக் குறைவே. இது நிற்க.

(இதன் தொடர்ச்சி 236 பக்கம் பார்க்க)

கீழ் மூன்றும் பகுதியில் (பக்கம் 204ல்) திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் பெரியகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியை ப்ரஸ்தாவித்து "இந்த ஸ்வாமியின் திருவுருவப்படத்தை ஸம்பாதிக்க முயன்று கொண்டிருக்கிறேன்" என்றெழுதியிருந்தேன். அம்முயற்சி ஸபலமாயிற்று. இவ்விடத்தில் அந்த ஸ்வாமியின் திருவுருவம் ஸேவிக்க ப்ராப்தமாகிறது. இந்த ஸ்வாமி காஞ்சியில் பல ஸம்வத்ஸரங்கள் எழுந்தருளியிருந்தாரென்பதையும் இவரிடத்திலும் அடியேன் சில நாடக க்ரந்தங்கள் வாசிக்க நேர்ந்ததென்பதையும் முன்னமே யெழுதியிருக்கிறேன். இந்த ஸ்வாமியைப் பற்றி அடியேன் நினையாத நாளே கிடையாது. விசாகபட்டணத்தில் ஸுப்ரஸித்த வித்வச்சிகாமணியாக எழுந்தருளியிருந்த மஹாமஹோபாத்யாய பரவஸ்து ரங்காசார்யஸ்வாமிக்கு இந்த திருநாங்கூர். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி மாப்பிள்ளை முறையாவர். ஆகவே இவர் விசாகபட்டணத்திலேயே சில வாண்டுகள் வஸித்திருந்து அந்த ஸ்வாமியிடத்தில் பல கலைகள் பயின்றார். ப்ராஸங்கிகமாக அந்த ஸ்வாமியின் பாண்டித்ய ப்ரபாவத்தைச் சிறிது தெரிவிக்கிறேன். அவரை சதுச்சாஸ்த்ரங்களிலும் சதுஷ்ஷஷ்டி கலைகளிலும் வல்லவரென்று சொல்லுவார்கள். அவர் மிகப் பெரியதொரு ஸம்ஸ்க்ருதகோசம் எழுதியிருக்கிறார். அதில் அ, ஆ என்னுமிரண்டெழுத்தை ஆதியிலேயுடைய ஸம்ஸ்க்ருத பதங்கள் மட்டுமே அச்சாகியிருக்கின்றன (தெலுங்கு லிபியில்). மற்ற பதங்களும் பூர்த்தியாக எழுதப்பட்டுப் பல பீரோக்களில் அடுக்கப்பட்டிருப்பதை நேரில் பார்த்திருக்கிறேன். இதைப் பூர்த்தியாக அச்சிடுவதற்குத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் அங்கீகரித்திருப்பதாகக் கேள்வி. இந்த கோசத்தை ஊன்றிப் பார்க்கும்போது இதை யெழுதிய



ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் திருநாங்கூர். பெரிய க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி (வைகுண்டவாஸி)

பரவஸ்து ஸ்வாமி 'ஜங்கம புஸ்தகாலயம்' என்று சொல்லக் கூடியவர் என்பது நன்கு புலப்படும். ஆனல் இப்பெரியார்க்கு ஒரு குறையுண்டு. ஸ்ரீவைஷ்ணவ ஸதாசார்ய திவ்யக்ரந்தங்களிலே அபிநிவேச மில்லாமையே அது. இதைப்பற்றி அடியேனுக்கு நேரில் தெரியாதாதலால் நிற்கிறேன்.



ஸ்ரீமதுபயவே மஹாமஹோபாத்யாய பரவஸ்து ரங்காசார்ய ஸ்வாமி விசாகபட்டணம் (வைகுண்டவாஸி)

இந்த ரங்காசார்ய ஸ்வாமியின் பௌத்ரர் ஸ்ரீமான் பட்டநாத ஸ்வாமியென்பவர் (வைகுண்டவாஸி) மிகச் சிறந்த வித்வானக விளங்கினர். இவர் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜில் சில வருஷங்கள் லெக்செரராக விளங்கினர். அப்போது நமது மஞ்ஜுபாஷிணீ பத்ரிகையை வரவழைத்துக் கொண்டு அதற்குச் சில வியாஸங்களு மெழுதிக்கொண்டிருந்தார். அந்த வியாஸங்கள் பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய விப்ரதீபங்களாகவேயிருக்கும். அவற்றுக்கு அப்போதப்போது அடியேன் மறுப்புகளெழுதி வெளியிட்டுக் கொண்டேயிருந்தேன். அப்போது இரண்டொரு வருஷகாலம் மஞ்ஜுபாஷிணீ பத்ரிகையில் இவர்க்கும் அடியேனுக்கும் ஓயாத வாத விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. அந்த ஸமயத்தில் அவர்க்கே மிகுந்த அநுதாபம் உண்டாயிற்று. அதே சமயத்தில் அவர் அகஸ்மாத்தாகப் பரமபத மடைந்துவிட்டார். வாத ப்ரதிவாதங்கள் நடந்த திருக்கட்டும். அவர் மிகச்சிறந்த மேதாவியாயும் லேகனகுசலராயும் சாஸ்த்ரஜ்ஞராயும் விளங்கினர். அவர் வெகுகாலம் ஜீவித்திருந்தால் லோகோபகாரம் மிகமிக ஏற்பட்டிருக்கும்.

---

5. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் மூன்ருவதாயிரம்—இயற்பா. இவ்வாயிரத்தில் பொய்கையார் பூதத்தார் பேயார் அருளிச்செய்த மூன்று திருவந்தாதிகள், திருமழிசைப்பிரானருளிய நான்முகன் திருவந்தாதி, நம்மாழ்வா ரருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி. திருமங்கையாழ்வா ரருளிச்செய்த திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல். திருவரங்கத்தமுதனு ரருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதி ஆக 10 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இவற்றுக்கு தீபிகையுரை ரூ. 10-0-0. இவ்வாயிரம் மூன்று வால்யமாகவும் கிடைக்கும்.

6. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் நான்காவதாயிரம்—திருவாய்மொழி. இது நம்மாழ்வா ரருளிச் செய்தது, ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்கள் கொண்டது. இதற்கு தீபிகையுரை ரூ. 22-0-0. ஒவ்வொரு நூறு பாசுரம் தனித்தனியாகவும் கிடைக்கும்.

7. நித்யாநுஸந்தான வுரை :

ஏறக்குறைய நானூறு பாசுரங்களை ஸாரமாக வெடுத்து நம் முன்னோர்கள் நித்யாநுஸந்தானமென்று பெயரிட்டிருப்பது ப்ரஸித்தம். திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, நீராட்டம், பூச்சூடல், காப்பிடல், சென்னியோங்கு, அமலனுதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு, கோயில் திருவாய்மொழி, இராமாநுச நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை; திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்பிரபந்தம், ஞானஸாரம், பிரமேயஸாரம், ஸப்தகாதை. இவற்றுக்கு எளிய தெளியவுரை இதில் அடங்கியுள்ளது. ரூ. 3-0-0. (தொடர்ச்சி பக்கம் 240.)

கீழ் மூன்றாம் பகுதியில் (பக்கம் 158ல்) "சென்னையில் உபந்யாஸ ஸபையில் அந்வயம்" என்று ஆரம்பித்து எழுதி வருகையில் பல பெரியோர்களைப்பற்றி (உருவப்படங்களுடன்) பல செய்திகள் தெரிவித்திருக்கிறேன். அந்த ப்ரகரணத்தில் மற்றும் சில பெரியார்களைப்பற்றித் தெரிவித்திருக்க வேண்டிய அவசியமிருந்தது. ஞாபகக் குறைவினால் விடுபட்டவற்றை இங்குத் தெரிவிக்க ஆவல் கிளர்கின்றது. லௌகிகத்தில் உத்துங்கபதவிகளில் அமர்ந்திருந்து விச்ராந்தர்களான மஹான்களில் மிகச் சிறந்தவரான ப்ரஹ்மஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களை அறியாதவர்கள் மிகச் சிலரே யாவர். இப்பெரியார் மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி. (பரலோக வாஸி) சாமிநாதய்யரவர்களைப் போலவே பரம ஸௌலப்ய மூர்த்தியாய் சென்னைத் தொண்டமண்டலம் ஸ்கூல்ஹால் உபந்யாஸ கோஷ்டியை ஸமய விசேஷங்களில் அலங்கரிப்பர். இம்மஹானுக்குத் திருப்புகழ்மணி யென்று ஒரு விருது உண்டு. இது உண்மையில் இவர்க்கு அந்வர்த்தமான பிருது. நாளைக்கும் இப்பெரியார் திருப்புகழ் பஜனையில் அத்விதீயமான



ப்ரஹ்மஸ்ரீ. T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள். (திருப்புகழ்மணி)

ப்ரக்க்யாதி வாய்ந்து விளங்குபவர். இவர் ஒரு விசை தொண்டமண்டலம் ஸ்கூல் ஹாலில் விஜயஞ்செய்து உபந்யாஸமுடிவில் முடிவுரை பேசினபோது, நாம் விநோதமாக வொன்று சொன்னதுண்டு; (அதாவது)—"இப்பெரியார்க்குத் திருப்புகழ்மணி யென்கிற விருது இடையிலே வந்ததென்று யாரும் நினைக்க வொண்ணாதபடி யன்றோ இவர்க்கு T. M. என்கிற இன்ஷல் இயற்கையாகவே அமைந்திருக்கின்றது T. திருப்புகழ்; M. மணி. என்பதுதானே அந்த ஸம்க்ஷேபமான இரண்டெழுத்துகளுக்கு வியாக்கியானம்" என்று சொன்னேன். இச்சொல்

ஸபையார்களுக்கு மட்டுமன்றிக்கே அப்பெரியார்க்கும் மிகுந்த விஸ்மயத்தை விளைத்தது. இவ்விஷயம் அதுவரையில தம்முடைய புத்திக்கும் எட்டியிருக்கவில்லை யென்று உகந்து பாராட்டிக்கூறினர். அவர்களுடைய ப்ரேமவிசேஷங்களைப் பற்றி அடிக்கடி ஸ்மரிக்கலாகிறது.

வடநாட்டில் காசி முதலான க்ஷேத்திரங்களிலிருந்தும் ஸமய விசேஷங்களில் பல பெரியார்கள் தக்ஷிண தேச ப்ராந்தம் வருவதுண்டு. ஸஞ்சார க்ரமத்தில் அப்படிப்பட்டவர்களும் பெரும்பாலும் செய்தி தெரிந்துகொண்டு தொண்டமண்டலம ஸ்கூல்ஹால் உபந்யாஸ கோஷ்டிக்கு விஜயம் செய்து போவதுண்டு. இவ்விதமாக விஜயம் செய்துபோன மஹான்கள் இதுவரையில 70, 80 பேர்கள் சேரக்கூடும். அவர்களுக்குத் தமிழ்ப் பாஷை தெரியாததனால் அன்று அவர்களுக்காக ஸம்ஸ்க்ருத பாஷையிலோ ஹிந்தி பாஷையிலோ அன்றைய உபந்யாஸத்தின் ஸாராம்சம் எடுத்துரைக்க நேரும். அதனால் அவர்கள் பரமத்ருப்தியடைந்து போவார்கள். அப்படிப்பட்டவர்களில் சில மஹான்களின் உருவப்படங்களே நமக்குக் கிடைத்துள்ளன. பல பேர்களைப் பற்றி நினைவு வைத்துக்கொள்ளவும் ஸாத்யமாகவில்லை. சிலரைப் பற்றி மட்டும் இங்குத் தெரிவிக்கிறேன். இங்கே காட்சி தருபவர் காசியில் 'பூலாநாலா' என்னுமிடத்தில் மாத்வ மடாதிபதியாக இருந்தவர். இவர் பரகதியடைந்து பத்து வருடங்களுக்கு மேலாகிறது. இவர் ஸாஸ்வதீகடாக்ஷத்தையும் லக்ஷ்மீகடாக்ஷத்தையும் வெகு விசேஷமாகப் பெற்றவர். அனேக தர்சன க்ரந்தங்களில் ஆழ்ந்த ஞானம் பெற்று தார்சநிக க்ரந்தங்கள் பலவும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். தர்க்க சாஸ்த்ரத்திலும் சில நூல்கள் பிரசுரம் செய்திருக்கின்றார். சாஸ்த்ரங்களில் வாதம் பண்ண வல்ல உத்தண்ட பண்டிதர். இவர் இருபது வருடங்களுக்கு முன் ஸபரிவாரராக சென்னை மாநகர் வந்திருந்து தங்கசாலை வீதியில் தங்கியிருந்தார். அப்போது மார்கழிமாதம். அவருடைய பரிசயம் நமக்கு அடியோடிருந்ததில்லை. ஆனாலும் செய்தி யறிந்துகொண்டு காலக்ஷேப கோஷ்டிக்குத் தாம் வரவிரும்பியிருப்பதை ஆஸ்தாந பண்டிதர் மூலமாக நமக்குத் தெரிவித்தார். உடனே நாம் நேரில் சென்று வார்த்தையாட அவருடைய பரத்வ ஸௌலப்யங்களை யறிந்து மிகவும் ஆனந்திக்கலாயிற்று. இந்த ஸம்பவம் 1936 ஆம் வருஷத்திலென்று ஞாபகம். அன்றைய



காசீ. மாத்வ மடாதிபதி. கோஸ்வாமி தாமோதரலால்ஜீ (பரலோகவாஸி)

தினம் தொண்டமண்டலம் ஸ்கூல்ஹாலில் அரையர் ஸேவைநடத்த ஏற்பாடாகியிருந்தது. ப்ராஸங்கிகமாக இந்த அரையர் ஸேவையைப்பற்றி இங்குச்சிறிது தெரிவிக்கலாகிறது. கோயில்ஸ்ரீ வில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி முதலிய சில திவ்ய தேசங்களில் மட்டுமே இப்போது அரையர் ஸேவை என்கிற க்ரமம் நடைபெற்று வருகின்றதென்பது ப்ரஸித்தமான விஷயம். அவர்கள் தங்களுக்குரிய சிரோபூஷணமொன்று [குல்லாய்] அணிந்துகொண்டு கையில் தாளமுங்கொண்டு தேவகானத்தில் திவ்யப்ரபந்தப் பாசுரங்களை ஸேவிப்பார்கள். வழக்கமாகச் சில பாசுரங்களுக்கு வியாக்கியானம் ஸேவிப்பதோடு அபிநயிப்பதுமுண்டு. இது மார்கழி மாதத்தில் பகற்பத்து இராப்பத்து என்னப்படுகிற திருவத்யயநோத்ஸவத்தில் வெகு விசேஷமாக நடைபெற்று வருவதாம். ஸ்ரீமந் நாதமுனிகள் காலந்தொடங்கி இது நடந்துவருவதாக ஸம்ப்ரதாயம். முதன் முதலாக அடியேன் ஸ்ரீரங்கம் விடைகொண்டிருந்தபோது அங்குத் திருவத்யயநோத்ஸவத்தில் இந்த அரையர் ஸேவையிலே யீடுபட்டு, அந்தோ! அரையர் திருவம்சத்தில் ஜனிக்கப் பெறாமல் போனேனே! என்று மிக வருந்தினதுண்டு. யாரேனுமொரு அரையர் நம்மை ஸ்வீகாரம் செய்து கொள்வாரா? என்றும் விசாரித்துப் பார்த்ததுண்டு. உள்ளத்தில் மிகப் பெரிதாக இருந்த இக்குறையை எம்பெருமான் ஒருவாறு தீர்த்தருளினது என்னுள்ள மொன்றையே ஸாக்ஷியாகக்கொண்ட ஸந்தோஷமாகும். சென்னைமா நகர்க் காலக்ஷேப ஸபையில் மார்கழி மாதந்தோறும் ஒருநாள் இந்த அரையர் ஸேவை நடத்தப்பட்டு வருகின்றது. அரையர்களின் அநுகாரம் பரிபூர்ணமாக நடந்து வருகின்றது. மார்கழி பிறந்தவுடனேயே 'அரையர் ஸேவை என்றைக்கு? அரையர் ஸேவை என்றைக்கு? என்று பக்த வர்க்கங்கள் வெகு குதூஹலமாகக் கேட்டுக்கொண்டு அந்நாளை எதிர்பார்த்திருந்து மிகப்பெருந்திரளாக வந்துகூடி யநுபவிப்பது நாளைக்கும் வழக்கமாயிருந்து வருகிறது. அன்று அடியேன் அரையர் கோலங்கொண்டே காட்சி தருவேன். பரஸ்துதரான மாத்வ மடாதிபதி அரையர் ஸேவை நடைபெறுமன்று காலக்ஷேப ஸபைக்கு விஜயஞ்செய்து தாம் பரமானந்த ஸந்தோஹ கந்தலித ஸ்வாந்தரானமையை அப்போதே யெழுந்து ஸம்ஸ்க்ருத பாஷையில் வெளியிட்டார். அப்போதிருந்து அவருடைய



ஸ்நேஹம் நமக்கு அதிகமாக ஓங்கி வளர்ந்தது. பிறகு இருமுறை அவருடைய வேண்டுகோளுக்காகவே காசிக்குச் செல்ல நேர்ந்தது. நாம் பதிப்பித்த ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலையின் முத்ரணத்திற்கு மஹோபகாரகர்களில் இந்த மஹான் தலைவராயிருந்தார்.

காசியில் ராஜமந்திரம் என்கிற இடத்தில் ஸ்ரீதேவநாயகாசாரி யென்கிற ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர் ப்ரஸித்தராக விளங்கிவருகிறார். இவரும் சில தடவைகள் தக்ஷிண ப்ராந்தம் வந்து சென்னைக் காலக்ஷேப ஸபையிலும் அந்வயித்தவர். இவர் ஸ்ரீமத் காதிஸ்வாமியின் திருவடி ஸம்பந்தம் பெற்றவர். இவர் வியாகரண சாஸ்த்ரத்தில் பரிபூர்ண பாண்டியத்யம் பெற்று மிகவும் வாக்மியாயிருப்பவர். இப்போது வேதாந்த சாஸ்திரத்திலும் அவகாஹித்தவர். இவருடைய முயற்சியால் காசியில் ஸ்ரீராமாநுஜ வித்யாலயம் என்கிற ஸ்ரீவைஷ்ணவ பாடசாலை ஏற்பட்டு ஏறக்குறைய இருபது ஸம்வத்ஸரங்களாக நல்லமுறையில் நடந்து வருகின்றது. இந்த கலா சாலையிலிருந்து உத்தராதி ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் விசிஷ்டாத்வைத வேதாந்தத்திலும் உத்தீர்ணர்களாகியிருக்கின்றனர். இப்பண்டிதர் வடநாடுகளில் இதிஹாஸ புராண ப்ரவசனம் செய்வதில் மிகவும் ப்ரக்க்யாதர். வடநாட்டில் ஸுப்ரஸித்த விரக்த வித்வத் வரேண்யரான கரபாத்ரி ஸ்வாமியென்கிற அத்வைதி ஸந்ந்யாஸி இந்த தேவநாயகாசாரிக்கு 'உத்தரதேசீய ராமாநுஜர்' என்று விருதளித்திருக்கிறார். இவரிடம் வியாகரணம் பயின்று தேறியவர்கள் காசியில் பலருளர். காசியில் கங்கைக்கரையருகில் இவர் வாழ்பவராதலால் காசிக்குச் செல்லும் நமது நாட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்வாமிகள் இவருடைய உதவியை நாடி ஸுகமாக வாழலாமங்கு. 'ராஜமந்திர்' என்று ப்ரஸித்தமானவிடமே இவருடைய வாஸஸ்தானம்.



ஸ்ரீமத். வியாகரணாசார்ய.
தேவநாயகாசாரீ ; காசீ.



நேபாள மஹந்து—ராமாநுஜதாஸ்
ஸாளக்ராம க்ஷேத்ர மார்க்கத்திலுள்ள
ஒரு மஹான்.

அடியேனுக்கு ஸ்ரீபதரிகாச்ரம பர்யந்தமான வடநாட்டு யாத்திரை பல முறை கிடைத்திருக்கிறதென்று முன்னமே (பக்கம் 88-லும், பக்கம் 154-லும்) விஜ்ஞாபித்திருக்கின்றேன். ஸாளக்ராம க்ஷேத்ர யாத்திரை ஒரு பர்யாயங்கூட நேர்ந்ததில்லை. ஆனால் சென்று ஸேவிக்க வேணுமென்கிற குதூஹலம் மிகமிக வுண்டு. ஸாளக்ராமம் போகிறவழியில் காட்மண்டு என்பதொரு ஸ்தலமுள்ளது. அவ்விடத்திலே வஸிப்பவர் இந்த மஹந்து. இவர் எனக்கு அபரிசிதராயிருந்தும் தாமாகவே எனக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தார். ஸாளக்ராமம் வந்து ஸேவிக்க வேணுமென்று ஒவ்வொரு கடிதத்திலும் எழுதிக்கொண்டிருந்தார். காட்மண்டுவரையில் எளிதாக வந்துவிடலாமென்றும், அவ்விடம் வந்துவிட்டால் அங்கிருந்து தாம் ஸாளக்ராம யாத்திரையை ஸௌக்கியமாக நடத்திவைக்க முடியுமென்றும் மாதந்தோறும் சோம்பாது எழுதிக்கொண்டிருந்தார். இது இருபது வருடங்களுக்கு முற்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறபடி. அந்த ஸமயத்தில் பல மாதங்கள் அவர்க்கு நான் பதில் எழுதாமலேயிருந்துவிட்டேன். அதனால் அவர் மிகவும் பரிதபித்து முன்னாடி தெரிவிப்பதும் செய்யாமலே நேராகக் காஞ்சீபுரம் வந்தார். அன்று நான் சென்னையில் உபந்யாஸத்திற்காக வந்திருந்தபடியால் அதைத் தெரிந்துகொண்டு உடனே இவர் காஞ்சியில் நின்றும் புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்து உபந்யாஸ ஸபைக்கும் வந்து சேர்ந்து ஒருபுறமாக உட்கார்ந்துகொண்டார். இவரை நான் முன்பு பார்த்ததில்லையாதலால் இவரை இன்னாரென்று தெரிந்துகொள்ளாதிருந்தேன். ஸ்ரீபெரும்பூதூர், திருமழிசை முதலான விடங்களில் சில உத்தராதி வைஷ்ணவர்கள் வாஸம் செய்வதுண்டாகையால் அன்னவர்களில் இவரொருவர் போலும் என்றும் நினைத்துவிட்டேன். உபந்யாஸ முடிவில் இவர் எழுந்து அருகே வந்து ஸ்ரீஸாளக்ராமத் திருமூர்த்திகள் நிரம்பியிருந்தவொரு சிறு பெட்டியைக் கையிலே கொடுத்து நமஸ்கரித்து நின்றார். நீர் யார்? எவ்விடம்? என்று ஹிந்தியில் விசாரிக்கையில், அவருக்கு நான் எழுதியிருந்த கடிதங்களை ஒன்றுவிடாமல் அவர் என் கையில் கொடுத்து ஒன்றும் பேசாமலே நின்றார். உடனே அவரை நான் இன்னாரென்று தெரிந்துகொண்டு 'திடீரென்று இவ்விடம் வந்த காரணமென்ன?' என்று வினவினேன். அவர் கண்ணீர் பெருகநின்று "பல மாதங்களாய் ஸ்வாமி அடியேனை உபேக்ஷித்திருக்கும் காரணம் தெரியவில்லை; நேரில் பிரார்த்

தித்து ஸாளக்ராம க்ஷேத்ரத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போவதற்காகவே வந்தேன். இது நல்ல ஸமயம். ஒருவாரத்திற்குள் அவசியம் புறப்பட்டு எழுந்தருளவே வேணும். இந்த யாத்திரைக்காக ஆகும் செலவுகளெல்லாம் என்னுடையவை; ஒன்றும் ஆலோசியாமல் புறப்படவேணும். இந்த ஸபையிலேயே வாக்தானம் செய்யவேணும்" என்றார். அப்போது உபந்யாஸ கோஷ்டி கலையவில்லை. யாவரும் உட்கார்ந்துகொண்டே யிருக்கிறார்கள். இவ்வளவையும் செவியுற்று அதிசயப்படுகிறார்கள். பிறகு நான் அவரைக் கேட்கின்றேன்— எனக்கு ப்ராப்தமாகவேண்டிய ஸ்ரீஸாளக்ராம யாத்திரையைப்பற்றி உமக்கு ஏதுக்காக இவ்வளவு விசாரம்?" என்றேன். அதற்கு அவர் சொன்னது—"சில வருஷங்களுக்குமுன் ஸ்வாமியை அடியேன் ஸ்ரீஜகந்நாதபுரியில் ஸேவித்திருக்கிறேன். ஆனால் நெருங்கிப் பழக ப்ராப்தமாகவில்லை. அதுமுதல் ஸ்வாமி அடிக்கடி கனவில் காட்சிதந்து எனக்கு ஸாளக்ராம யாத்திரையை நடத்திவைக்க வேணுமென்று அபேக்ஷையைக் காட்டி வருவதால் இதை பகவானுடைய நியமனமாகக்கொண்டு அடியேன் விஜ்ஞாபனங்களெழுதிக்கொண்டேன். வெகுநாளாய் ஸ்ரீமுகம் வருவதே நின்றுவிட்டபடியால் எப்படியாவது அழைத்துக்கொண்டு போகவேணுமென்கிற உறுதியுடன் வந்திருக்கின்றேன்" என்றார்.

இது ஸ்ரீஸாளக்ராம பகவானுடைய பரமாநுக்ரஹ பரீவாஹமேயென்று கொண்ட அடியேன் இதற்கு எவ்விதமான தடையும் சொல்லலாகாதென்றும், இந்த ஸமயம் அவசியம் சென்று ஸேவித்தே வரவேணுமென்றும் உறுதிகொண்டேன். அப்போது உபந்யாஸ ஸபையாரும் ஒருவர் தப்பாமல் 'இந்த ஸமயத்தை இழக்கவே கூடாது; இரண்டு மூன்று மாதங்களானாலும் அவசியம் இந்த யாத்திரையை நடத்தி முடிப்பதே நலம்; எம்பெருமானே நேரில் வந்து அழைப்பது போலன்றோ வுள்ளது' என்று கூறினார்கள். சிலர் தாங்களும் உடன் வருவதாகச் சொன்னார்கள். நாலைந்து நாள்களுக்குள்ளாகவே பிரயாணப்படுவதென்று உறுதி செய்து 'இரண்டு மாதங்கள் வரையில் உபந்யாஸத்திற்கு விராமம்' என்று சொல்லியுமாயிற்று. உடனே காஞ்சீபுரம் வந்து சேர்ந்தவளவிலே, அஸ்மதாசார்யரான ஸ்ரீகாதிஸ்வாமி அப்போது திருமேனியில் அபரிமிதமான அசக்தியுடன் (Chapra) சப்ரா என்னு மூரிலே [காசீ ப்ராந்தத்திலே] எழுந்தருளி யிருக்கிறபடியாதலால் அங்கிருந்து தந்தி ஸமாசாரம் கிடைக்க, ஸ்ரீஸ்வாமி திருக்குமாரரை யழைத்துக்கொண்டு அங்கே செல்லவேண்டியதாயிற்று. அன்றைக்கே புறப்படலாயிற்று. நேபாள மஹந்து சென்னையிலிருந்து திருமழிசை முதலான சில திவ்ய தேசங்களை ஸேவித்துக்கொண்டு இரண்டு மூன்று நாளில் காஞ்சிவந்து சேருவதாகச் சொல்லிப் பிரிந்து போனவராதலால் அவரைச் சந்திக்கமுடியாமலே நான் சப்ரா சென்றுவிட்டேன். அந்த மஹந்து 3, 4 நாளில் காஞ்சீபுரம் வந்து சேர்ந்திருந்தார்.

நான் சென்றவிடத்துச் செய்தியைச் சுருக்கமாக விஜ்ஞாபிக்கிறேன். சப்ரா சென்று சேர்ந்து ஸ்ரீ ஸ்வாமியின் திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவிக்கவும் வார்த்தையாடவும் ப்ராப்தமாயிற்று. "இங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சிக் கெழுந்தருளவேணும்" என்று பிரார்த்திக்கையில் 'அப்படித்தான் உத்தேசம்; இரண்டு நாளில் புறப்படுவோம்' என்று ஸாதித்து, காலை பத்துமணியிலிருந்து மாலை ஐந்துமணி வரையில் அநேக யோகக்ஷேம விசாரங்கள் செய்துகொண்டு வார்த்தையாடிக்கொண்டே யிருக்கையில் 'எல்லாரும் சற்று எழுந்து அப்பால் போயிருங்கள்' என்று நியமித்துவிட்டு ஸந்தியாவந்தனம் செய்தருளிப் படுக்கையை விரிக்கச் சொல்லி சயனித்துக்கொண்டு தியானத்தில் அமர்ந்துவிட்டார். ஆறுமணிக்கு மேல் எல்லாரும் வந்து அருகே யிருந்து 'திருமேனியின் நிலை என்ன?' என்று கேட்கையில் 'ஒன்றுமில்லை' என்று ஸாதித்ததுதான் கடைசியான திருவாக்கு. பிறகு இரண்டு நாழிகைக்குள் திருநாடலங்கரித்தாயிற்று. இந்தச் செய்தி அன்றிரவே காஞ்சிக்குத் தெரியவந்தபடியால் இதைச் செவியுற்ற நேபாள மஹந்து இந்த ஸந்தர்ப்பத்தில் ஸாளக்ராம யாத்திரை நடைபெறாதென்று தானே முடிவு செய்துகொண்டு ஸ்வஸ்தானம் சென்று சேர்ந்துவிட்டார். அவருடைய உருவப் படத்தை மட்டும் பிறகு வரவழைத்துக்கொண்டேன். அதன் பிறகு அவரோடு பத்ரவ்யவஹாரங்கள் விசேஷமாக நடைபெறவில்லை. அவர் இப்போது ஜீவித்திருக்கிறாரா இல்லையா? என்பதையும் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. ஸாளக்ராம யாத்திரையில் எம்பெருமானுடைய திருவுள்ளம் இவ்வளவேபோலும் என்று எண்ணலாயிற்று. சப்ராவுக்குச் சென்று ஸ்ரீ ஸ்வாமியோடு வார்த்தையாடுகையில் இந்த ஸம்பவங்களை யெல்லாம் விஜ்ஞாபித்து 'ஸாளக்ராம பகவானுடைய ஸேவை அடியேனுக்கு விரைவில் ப்ராப்தமாகும் போலிருக்கிறது' என்றேன். அதற்கு ஸ்வாமி ஸாதித்தபடி—'ஸாளக்ராம யாத்திரைக்கு நான் இரண்டு மூன்று தடவை ஸங்கல்பம் செய்தேன்; ஸௌகரிய மேற்படவில்லை. மிகவும் ச்ரமஸாத்யமான யாத்திரை; எனக்கு நேராத குறைதீர உனக்காவது நேரட்டும்' என்பதாக. அடியேனும் அதன்பிறகு மூன்று நான்கு பரியாயம் ஸாளக்ராமஞ் செல்ல முயற்சிகள் செய்தேன். இனி இப்பிறவியில் இந்த ப்ராப்தி யில்லையென்று முடிவு செய்துகொண்டேன். ஆனாலும் ஸத்யகாமனும் ஸத்ய ஸங்கல்பனுமான எம்பெருமானுடைய திருவுள்ளத்தை யாரேயறிவார்? *அந்யோஹ்யந்யச் சிந்தயதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்* என்னுமவனுடைய திருவுள்ளத்தினால் ப்ராப்தமாகவுங்கூடும். "விதிவாய்க்கின்று காப்பாரார்?".

சென்னையில் உபந்யாஸ கோஷ்டி ஆரம்பித்தது முதலாக ஸ்ரீமான் உ. வே. பண்டித. A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காருடைய ஸஹயோகம் கிடைத்தது. இவர் திருவத்திபுரம் ஸமீபத்திலுள்ள அனக்காவூரில் ஜனித்தவர். சென்னை

மயிலேயில் ஒரு வித்யாசாலேயில் உபாத்யாயராக இருந்துவந்தார். ஸமீபகாலத்தில் தான் விச்ராந்தராகி ஸ்வக்ராமமேசென்று சேர்ந்திருக்கிருர். இரண்டு வருஷமாகிறது. அதற்கு முன்வரையில் ஒரு வேளை தவருமல் சென்னை யுபந்யாஸகோஷ்டியில் நியமேந அந்வயிப்பவர்களில் இவர் தலைவராவர். மற்றவர்களைப்போல் வெறுமனேயிருந்து கேட்டுப் போகிறவ ரல்லரிவர். உபந்யாஸங்களுக்கு நோட்டெடுப்பவரிவர் என்றே ப்ரஸித்தி. ஒவ்வொரு வேளையிலும் ஒவ்வொரு நோட்புக் வாங்கி வந்து அதைப் பூர்த்திசெய்து கொண்டு போவர். இங்ஙனமாக இவர் எழுதிச் சேமித்து வைத்திருக்கிற நோட் புத்தகங்கள் ஒரு பீரோ நிரம்பியிருக்கும். ஆனல் அவற்றைப் பிறர் வாசித்துப் பார்த்து விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியுமாவென்பது ஸந்தேஹமே. தம் மனத்திற்குமட்டும் புரியும்படியான அளவில் ஏதோ குறிப்பு அமைத்திருக்கிருர். அவர் தாமே அதை எல்லார்க்கும் புரிந்துகொள்ளலாம்படி விசதீகரித்து எழுதி வைப்பாராகில் உலகுக்கு ஒருவாறு பயன்படும். ஆனல் ஆங்காங்கு நாம் எடுத்துரைக்கும் ச்ருதி ஸ்மிருதி இதிஹாஸபுராண பஞ்சராத்ர திவ்யப்ரபந்த காவ்யநாடகாதி மேற்கோள்களைப் பூர்த்தி செய்யாது விட்டிருப்பதாகத் தெரியவருவதால் நம்முடைய மனோரதம் நிறைவேறுவது ச்ரமப்படுமென்றே நினைக்கலாகிறது. இது நிற்க. இந்த க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஏறக்குறைய இருபத்துநான்கு வருஷகாலம் அடியேனுடைய வுபந்யாஸ கோஷ்டியில் அந்வயித்திருக்கிருர். ஐந்தாறுமைல் தூரத்திலிருந்து ஸைகலில் வருவர். ஆப்ஸண்டும் லேட்டு மாகாதபடி காலத்தில் வந்து சேர்ந்துவிடுவர். 1931-ஆம் வஷத்தில் ஜூலை மாதத்தில் சென்னை யுபந்யாஸ கோஷ்டி தொடக்கமாயிற்றென்று முன்னமே (பக்கம் 159ல்) தெரிவித்திருக்



ஸ்ரீமான். உ. வே. பண்டித.
A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
அனக்காவூர்.

கிறேன். ஆரம்பத்தில் இரண்டொருநாள் மட்டுமே இவர்க்குத் தெரியாமலிருந்தது. தெரிந்து கொண்டதுமுதல் தவறாது தாம் அந்வயித்திருந்தது மட்டுமல்லாமல், தமக்குப் பல பெரியார்களோடு பழக்கமுண்டாதலால் அவரவர்களுக்கும் தெரிவித்து ஸமயவிசேஷங்களில் பல மஹான்களையும் ஸபைக்கு விஜயம் செய்யும்படி அழைத்துக்கொண்டு வருவர். இடையில் இவர்க்குப் புத்ரவியோக சோகம் தைவதுர்விபாகத்தினால் ஏற்பட்டது. ஏகபுத்ர விஷயமாதலால் மிகவும் சோகிக்கத் தக்கதாயிருந்தது. அந்த ப்ரபல சோகத்தையும் ஸ்வல்பகாலத்திலேயே மறந்துவிட்டது இவரிடத்தில் நான் கண்ட தனிப்பெருமை. ஸமீபகாலத்தில் ஸஹோதரருடைய குமாரனை ஸ்வீகாரம் செய்துகொண்டு இனிது வாழ்கின்றார்.

ஸ்ரீ உ.வே. மங்கலம் ராமாநுஜய்யங்காரென்பவர் பலவாண்டுகளாக சென்னையில் வாழ்பவர். பத்து வருஷங்களாக நம்முடைய உபந்யாஸ கோஷ்டியில் அந்வயிப்பவர். இவருடைய பகவத் பாகவத பக்தியையும் ஆசார்ய ப்ராவண்யத்தையும் தர்மருசியையும் மற்றும் பல திருக்குணங்களையும் விசேஷித்து விநயஸம்பத்தியையும் நினைக்கும்போது "இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே" என்று நம ஆசார்யர்கள் அருளிச் செய்யும் ஸ்ரீஸூக்தியே நமக்கு நினைவுக்கு வருகிறது. ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமத ஹோபிலமடாதிபதி ஸ்ரீமத் இஞ்சிமேட்டழகிய சிங்கரின் திருவடி ஸம்பந்தம் பெற்றவரிவர். அந்த மஹாஸ்வாமியினுடைய கடாக்ஷவீக்ஷணம் இவரிடத்தில் மிகவும் பரிபக்வமாகி யிருக்கின்றது. ஒரு பர்யாயம் நம்முடைய வடநாட்டுத்திருப்பதி யாத்திரையிலும் மலைநாட்டுத் திருப்பதி யாத்திரையிலும் அந்வயித்திருந்தார். கீழ் மூன்றாம் பகுதியில் (பக்கம் 198ல்) பதிப்பித்துள்ள பதரிகாச்ரம யாத்ரா ஸமஷ்டி படத்திலும் இவருடைய திருவுருவம் காணலாம். அப்போது இவருடைய திருக்குணங்களை விசேஷித்து அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. ஸகல கார்ய நிர்வாஹங்களையும் இவர்க்கு அதீனமாக்கி நிர்விசாரனாய்



ஸ்ரீமதுபயவே. மங்கலம் ராமாநுஜய்யங்கார் ஸ்வாமி
சென்னை

யாத்திரை செய்தேன். ஆத்ம பந்துவாக மட்டுமன்றிக்கே தேஹபந்துக்களிலு மொருவர் என்னும்படியாகப் புரையறக் கலந்து பழகும் சீலம் இவருடையது. இவருடைய திருவுருவப்படத்தை நோக்கும்போதே இவருடைய விநயஸம்பத்து முழுவதும் வடிவிலே தொடை கொள்ளலாம்படியிருக்குமாகையாலே இங்கு நான் விசேஷித்து எழுத வேண்டியதுமில்லை. இம்மண்ணுலகில் அக்ருத்ரிமப்ரக்ருதிகளென்று மிகச் சிலரையே நாம் கொண்டாட முடிகிறது. அப்படிப்பட்டவர்களில் முதன்மையாகப் பரிகணிக்கத்தக்க விவருடைய பகவத்பாகவதாசார்ய ப்ராவண்ய ஸம்ருத்திக்குப் பல்லாண்டு பாடி நிற்கிறேன்.

கீழே மூன்றாம் பகுதியில் (பக்கம் 159ல்)—"அடியேனுடைய வாழ்க்கையில் சென்னை யுபந்யாஸ மஹாஸபையில் அந்வயமென்னுமிந்த விஷயம் ஒரு தனிப் பட்டஸம்பவமென்றே சொல்லவேணும்" என்று எழுதியிருக்கிறேன். அதிலிருந்தே அடியேனுக்குப் பல பல மஹநீயர்களின் பரிசயமும் ஸஹவாஸமும் ஏற்பட்டபடியினால் அப்படிப்பட்ட மஹான்களின் பெருமைகளை விளக்க வேணுமென்கிற உத்தேசமே இந்தத் தன் சரிதை யெழுதுவதற்கு மூலகாரணமென்பதை எத்தனை தடவை யெழுதினாலும் புநருக்தியாகாது. இங்கே ஸேவை ஸாதிக்கின்ற ஸ்ரீமத் K. S. கிருஷ்ணன் ஸ்வாமியைப்பற்றிக் கீழ் மூன்றாம் பகுதியின் முடிவில் சிறிதளவு ப்ரஸ்தாவம் செய்திருக்கிறேன். இந்த மஹான் நிகரற்ற மேதாவியாகக் கொண்டாடப்படுகிறார். நம் நாட்டினர் மட்டுமன்றிக்கே மேல்நாட்டினரும் இப்பெரியாரை விசேஷமாக மெச்சி வரு



ஸ்ரீமதுபயவே டாக்டர் ஸர். K. S. கிருஷ்ணன், F.R.S.
"பத்மவிபூஷண" புதுடில்லி

கின்றனர். லண்டன் அமெரிக்கா முதலான த்வீபாந்தரங்களில் இம்மஹான் அடிக்கடி சென்று அங்குள்ள மேதாவிகளுக்கும் பல வழிகளில் ஸதுபாயங்கள் காட்டி வருகின்றனராம். இவருடைய ஸௌலப்யத்தைக் கண்டாலோ இத்தகைய பரத்துவங்களெல்லாம் பொய்யென்றே நினைக்கும்படியாயிருக்கும். சென்ற விக்ருதிவரு முதலாக வருஷந்தோறும் பங்குனி மாதத்தில் நமது க்ருஹத்தில் நடத்தப்பட்டு வரும் ஜன்மநக்ஷத்ர விசேஷத்திற்குத் தவறாது எழுந்தருளியிருந்து உபந்யாஸமுஞ் செய்து செவிக்கினிய செஞ்சொற்களால் யாவரையும் உகப்பித்து வருகிறார். அப்படியே சென்னை யுபந்யாஸ கோஷ்டியையும் அலங்கரித்து அங்கும் மங்களாசாஸனரூப ஸ்ரீஸூக்திகளைப் பொழிந்து ஸபையாரை யுகப்பித்துப் போருகின்றார். இதுதவிர நமது அம்ருதலஹரீ பத்ரிகைக்கும் அப்போதப்போது மிகச் சிறந்த வியாஸங்களை உதவி வருகின்றார். அவற்றை வாசித்துப் பார்ப்பவர்கள் "இந்த ஸ்வாமி நமது ஸம்பிரதாய க்ரந்தங்களிலேயே ஊடாடுகிறவராகக் காண்கிறதேயொழிய லௌகிகக் கல்விப்பயிற்சியில் இவர்க்கு அவகாசமேயிராதுபோல் தோன்றுகிறதே" என்பர்கள். இவர்க்கு ஆங்கிலத்தில் கரைகண்ட ஞானமென்பதை என்போல்வார் தெரிந்து கொள்வதற்கு ப்ரஸக்தியில்லை. இவருடைய வாய்மொழிகளைக் கேட்கும்போதும் வியாஸங்களை வாசிக்கும் போதும் "இவர் பரமவைதிகாக்ரேஸரர்; ஸத்ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபைகநிரதர்" என்றுதான் அறுதியிடலாயிருக்கும்.

டில்லியில் ஸ்ரீமத் C. S. பார்த்தஸாரதி ஐயங்கார், B.A., B.L., என்று ப்ரஸித்தரான ஸ்வாமியும் அடியேனுக்குப் பரமாப்தராக விளங்கி வருகின்றார்.



ஸ்ரீமதுபயவே C. S. பார்த்தஸாரதி ஐயங்கார், B.A., B.L., புதுடில்லி

இவர் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலும் ப்ரவணராயும் ப்ரவீணராயும் விளங்குபவர். ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களிலும் ஸ்ரீவசநபூஷணதி ரஹஸ்யங்களிலும் நல்ல

ப்ரவேசமுடையவர். இந்த ஸ்வாமியை அடியேன் டில்லியிலேயே பலமுறை ஸேவிக்க ப்ராப்தமாகியிருக்கிறதேயொழிய காஞ்சீ ப்ராந்தங்களில் எழுந்தருளி ஸேவை ஸாதிக்கப்பெற்றதில்லை. நம் தேசத்தவர்கள் பலர் உத்யோக நிமித்தமாக வடநாட்டுக்குச் சென்று அவ்விடத்துக் கார்ய நிர்வாஹமே போதுபோக்காக இருப்பர்கள். நம்முடைய பூர்வாசார்யர்களையும் அவர்களுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளையும் ஸ்மரிக்கவுங்கூட அன்னவர்களுக்கு அவகாசமிராது. இந்நிலையை நான் பலரிடத்தே கண்டிருக்கிறேன். சில மஹான்களோவென்னில், ஸ்வஸ்தானத்திற்காட்டிலும் அதிகமாகவே ஸ்வரூபரக்ஷணம் செய்து போருவர்கள். அன்னவர்களிலே, டில்லிமாநகரில் ஸ்ரீமான்களான S. R. S. ராகவன் ஸ்வாமி, K. S. க்ருஷ்ணன் ஸ்வாமி, C. S. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியென்று சிலரைப் பரிகணனம் செய்ய ப்ராப்தமாகிறது. இம்மஹான்களின் ஸ்ரீமுகங்களை அடிக்கடி நாம் ஸேவிக்கப்பெறுவதனாலும், இவர்களுடைய விலக்ஷணகாலக்ஷேப ப்ரக்ரியைகளையுமறியப் பெறுவதனாலும் உள்ளம் பூரித்து இது எழுதலாயிற்று.

ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களில் முதலாழ்வார்களின் பிரபந்தங்களான திருவந்தாதிகள் முதன்மை பெற்றிருந்தாலும், நமது பூர்வாசாரியர்கள் முதலாயிரமென்று பெரியாழ்வார் திவ்யப்ரபந்தங்களையே ஆதியாக வைத்துப் பரிகணநம் செய்தருளினர்கள். அவ்வாழ்வார் *வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூரென்று திருக்கோட்டியூரையே முதலிட்டுப் பாடத்தொடங்கினராதலால் திவ்யதேசங்களுக்குள் திருக்கோட்டியூருக்கு ஒரு சிறப்பு ப்ரஸித்தமாகவுள்ளது. இந்த திவ்யதேசத்தில் அடியேனுக்கு மிக்க இளமையிலேயே ஈடுபாடு உண்டாயிற்று. இருபது வயதுக்கு மேற்பட்டே எனக்கு இந்த திவ்யதேசத்தை ஸேவிக்க பாக்யமேற்பட்டாலும் 'வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே வேங்கடமேயென்கின்றாளால்*என்னுமாபோலே அடியேன் ஏழெட்டு வயதிலிருந்தே திருக்கோட்டியூர் திருக்கோட்டியூரென்று வாய்வெருவிக் கொண்டிருந்தேன். "கோஷ்டீ புரீச சதகம்" என்று நூற்றெட்டு ச்லோகங்கள் கொண்ட ஒரு ஸ்துதியையும் திருக்கோட்டியூரெம்பெருமான் விஷயமாக விஜ்ஞாபித்திருந்தேன். இது இந்நாள்வரையில் அச்சிடப்படவில்லை. வெகுகாலத்திற்கு முன்பு இயற்றப்பட்டதாகையாலே இதன் பிரதியும் கைதவறியிருந்தது. ஸமீபகாலத்தில் ஏதோ பழைய கந்த கூளங்களைத் தேடுகையில் இந்த ஸ்தவம் யாத்ருச்சிகமாகக் கிடைத்தது. விரைவில் இதை யச்சிட்டு ஸஹ்ருதய ஸஹ்ருந் மணிகளுக்கு உபஹரிப்பேன். இந்தத் திருக்கோட்டியூர்த் திவ்யதேசத்தில் திலகமாக விளங்கினவர் ஸ்தானீகம் தங்கமையங்கார் ஸ்வாமியென்பவர். அவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்கள் அதிமாத்ரம் ஸ்ப்ருஹணீயமானவை. ஸம்பிரதாய க்ரந்தங்களில் சதுரரும் ரஸிகருமாவர். அவர் அந்த நாட்டிலே அருமையாக அவதரித்தவரென்றே அடியேனுடைய அத்யவஸாயம். அந்த திவ்யதேசத்திலே அடியேனுக்கு அறியாக்காலத்துள்ளே அன்பு விளைந்தது போலவே அந்த ஸ்வாமி பக்கலிலும் அடியேனுக்கு அறியாக்காலத்துள்ளேதான் அன்பு விளைந்தது. பரஸ்பரஸமாகமம் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளினது மிகவும் ஸமீபகாலத்தில்தான். ஆதியிலிருந்து இவரிடமிருந்து கிடைத்த ஸ்ரீமுகங்கள் ஏறக்குறைய ஓராயிரமிருக்கும். ஒவ்வொன்றும் ரஸகனமாகவேயிருக்கும்.

அடியேன் முதல் தடவையாக தக்ஷிண திவ்ய தேசயாத்திரை செய்யும்போது ஆங்காங்குள்ள மஹான்களின் திருவருளுக்கு இலக்காகப் பெற்றேன். பாவியேனுடைய தௌர்ப்பாக்யத்தினால் அன்னவர்களில் பலர் இம்மண்ணுலகைத் துறந்து விண்ணுலகேகி விளங்குகின்றனர். ஆயினும் அவர்களோடு அடியேனுக்குண்டாகி யிருந்த நெருங்கிய பழக்கமும், அடிக்கடி ஸ்மரண கோசரமாகிற அவர்களின் திருக்குணங்களும் அவர்களை மறக்கவொட்டுகின்றதில்லை. நாச்சியார் கோயிலென்று

ப்ரஸித்தமான திருநறையூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே. நடாதூர். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியோடு அந்த திவ்ய தேசத்திலேயே முதன்முதலாக வுண்டான பரிசயம் ஸௌஹார்த பரம காஷ்டாபந்நமாக விருந்தது. அந்த ஸ்வாமி ராஜஸ்தானங்களிலும் கனக கங்கண பூஷணாதி மரியாதைகள் பெற்ற பண்டிதோத்தமர். திவ்ய ப்ரபந்தங்களிலும் அத்யந்தம் அபிநிவிஷ்டர். அவ்விடத்து ஸந்நிதியில் அத்யாபக மிராசும் தீர்த்த மரியாதையுமுடையரா யிருந்தவரென்று ஞாபகம். அடியேன் முதல் தடவை இந்த திவ்ய தேசத்திற்கு விடைகொண்டிருந்தபோது இந்த ஸ்வாமியின் திருமாளிகை ஸமீபத்தில் காரப்பங்காடு திருவேங்கடத்தய்யங்காரென்று ஒரு பெரியவர் எழுந்தருளியிருந்தார். ப்ரஸித்தராயிருந்த தமிழ்வித்வான். காரப்பாடுகோபாலாசாரியருடைய திருத்தமையனார் அவர் என்று நினைவு. அவர்க்குத் திருவடிகள் ஊனமாதலால் ஸஞ்சாரக்ஷமதையில்லாம லிருந்தது. அந்த ஸ்வாமி மிகச்சிறந்த விவேகியென்று கேள்விப்பட்டு அவரைத் தெண்டன் ஸமர்ப்பிப்பதற்காக அவர் திருமாளிகைக்கு விடைகொண்டு வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் ஸம்பாஷண த்வநியைக் கேட்டு இந்த நடாதூர்ஸ்வாமி அங்கே யெழுந்தருளினர். [இது 1907 ஆம் வருஷத்துச் செய்தி] அப்போது அடியேன் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலிருக்கிறேன். ஒன்றிரண்டு நூல்களெழுதி வெளியிட்டிருந்தேன். அதைக் கடாக்ஷித்திருந்தவர் நடாதூர் ஸ்வாமி. இவர் அங்கு எழுந்தருளினவுடனே 'காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமி தேவரீர்தானே? என்று கேட்டார். இக்கேள்வியிலிருந்துதான் அந்தத் திருவேங்கடத்தையங்காரும் அடியேனை இன்னானென்று தெரிந்து கொண்டார். ஐம்பதுவருஷ மாய்விட்டாலும் இந்நிகழ்ச்சி இன்று போலிருக்கிறது. நடாதூர் ஸ்வாமியின் திருவுருவப்படம் அடியேனுக்குக் கிடைக்க இத்தனை



ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான். நடாதூர்.
க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, நாச்சியார் கோவில்.
(வைகுண்டவாஸி).

நாளானபடியால், முன்னமே யெழுதியிருக்கவேண்டிய இந்நிகழ்ச்சிகளை இப்போது தான் எழுத அவகாசம் வாய்த்தது. அன்று காலை திருக்குடந்தையிலேயே பெருமாள் திருவாராதனத்தை முடித்துக்கொண்டு கால்நடையிலேயே நாச்சியார் கோயிலும் திருச்சேறையும் ஸேவிக்கப் புறப்பட்டிருந்தேன். அன்று மாலை திருநறையூர் நம்பியை ஸேவித்துவிட்டு உடனே திருச்சேறை சென்று சேர்வதாக உத்தேசித்திருந்தேன். ஆனால் நடாதூர் ஸ்வாமியின் ஸௌஹார்த விசேஷம் அப்போது அங்கு அடியேனை மூன்றுநாள் தங்கியிருக்கச் செய்துவிட்டது.



நடாதூர் ஸ்வாமியின் மூத்த திருக்குமாரர்.
ஸ்ரீமதுபயவே. பண்டித.
N. K. ராகவாசார்ய ஸ்வாமி.

இரண்டுநாள் ஸன்னிதியில் உபந்யஸிக்க ஏற்பாடுகள் செய்துவைத்தார். அந்த ஸ்வாமி தாமும் உபந்யஸித்தருளினார். அடியேனோடு கூடவே திருச்சேறைக்கும் எழுந்தருளியிருந்து அவ்விரண்டு மூன்று நாட்களிலேயே ப்ரீத்யதிசயத்தைப் பெருக்கியருளினார். அந்த ஸ்வாமி சிஷ்யாநுக்ரஹத்திற்காக அடிக்கடி சில க்ராமங்களுக்கு எழுந்தருள நேரும். எங்கு எழுந்தருளியிருந்தாலும் வாரந்தோறும் ஸ்ரீமுகங்கள் ஸாதித்துக் கொண்டேயிருப்பர். ஸ்ரீமுகங்களெல்லாம் ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமாகவேயிருக்கும். அடிக்கடி காஞ்சிக்கு மெழுந்தருளி ஸேவை ஸாதிப்பர். இவர் திருநாட்டுக் கெழுந்தருளி 15, 20 ஸம்வத்ஸரமாகிறது. அவருடைய வியோகதுக்கம் இறையும் தோற்றாதபடி அவருடைய திருக்குமாரர் ஸ்ரீமத். ராகவாசார்யஸ்வாமி யென்பவர் *பிதுச் சதகுண ப்ரேம ஸம்பந்நராய் விளங்கி வருகிறார். இந்த ஸ்வாமியும் திருத்தகப்பனார் போலவே சிறந்த பண்டிதர். குளித்தலையில் வைகநல்லூரில் நிவாஸமாக விருந்து வித்யா சாலையில் ஸம்ஸ்க்ருத பண்டிதராய் விளங்கி வருகிறார். ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனார் ஒரு ஸமயம் பஞ்சவடியில் இளைய பெருமாளைநோக்கி* பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந ச லக்ஷ்மண !, த்வயா புத்ரேண தர்மாத்மா ந ஸம்வ்ருத்த: பிதா

மம * என்றருளிச் செய்தாரே; அதுதான் இந்த ராகவாசார்யர் விஷயமாக எனக்கு அடிக்கடி நினைவுக்கு வருவது. இவரும் திருத்தகப்பனார் போலவே அடிக்கடி ஸேவை ஸாதித்தும் ஸ்ரீமுகங்களருளியும் மகிழ்வித்து வருகிறார். *ஸௌஹார்த ஸ்வர்ண ரேகாயா உச்சாவசபிதாஜுஷ:, பரோக்ஷமிதி கோப் யஸ்தி பரீக்ஷா நிகஷோபல:* என்கிற ச்லோகரத்நம் பலருமறிவர். ப்ரத்யக்ஷத்திற்போலவே பரோக்ஷத்திலும் ப்ரேமம் வஹிப்பவர்கள் மிகவும் துர்லபர்களென்றே சொல்லவேணும். தைத்திரீய யஜுஸ்ஸம் ஹிதையில் இரண்டாவது காண்டம் ஐந்தாவது ப்ரச்நம் தொடங்கும்போதே * विश्वरूपो वै त्वाष्ट्रः पुरोहितो देवानामासीत् स्वस्रीयोऽसुराणाम् * [விச்வரூபோ வை த்வாஷ்ட்ர: புரோஹிதோ தேவாநாமாஸீத் ஸ்வஸ்ரீயோ ஸுராணாம்] என்றாரம்பித்து விச்வரூபனென்பானொருவனுடைய செய்தி சொல்லப்படுகிறது. அவன் ப்ரத்யக்ஷத்தில் தேவர்களைப் புகழ்வனாம்; பரோக்ஷத்தில் அஸுரர்களைப் புகழ்வனாம். இத்தகைய தன்மைவாய்ந்தவர்கள் உலகில் எத்தனைவரில்லை!. ப்ரத்யக்ஷபரோக்ஷங்களிரண்டிலும் ஸமமான ப்ரேமம் வஹிப்பவர்கள் அடியேனுடைய அநுபவத்தில் சிற்சிலரே காணப்படுகிறார்கள். அன்னவர்களைப்பற்றி அடியேன் நெஞ்சுருகிக் கண்பனிப்ப எழுதாமலிருக்க முடியவில்லை. இத்தகைய விசிஷ்ட வ்யக்திகளைப்பற்றி இந்நூலில் எழுதுவதனால் நமக்கென்ன வுபயோகமென்று சிலரோ பலரோ நினைக்கக்கூடும். உண்மையில் அடியேனுடைய ஆத்ம ஸந்துஷ்டிக்காகவும் க்ருதஜ்ஞதாப்ரகாசநரூபமாகவுமே இவையெழுதலாகிறது. இத்தகைய மஹநீய குணசாலிகளுக்கு நாம் வேறு என்ன செய்யப்போகிறோம். "போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ" என்று வேதாந்த வாசிரியர் பணிக்கும் முறையிலே இப்படிப்பட்ட கிஞ்சித் காரமல்லது வேறுண்டோ?




ஸ்ரீமதுபயவே. வித்வத்வரேண்ய.
காளி. ரங்காசார்யஸ்வாமி.

புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் பலஸம்வத்ஸரம் தாநாதிகாரியாக வெழுந்தருளி யிருந்து பத்தெட்டு ஸம்வத்ஸரமாய் விச்ராந்தி பெற்றிருக்கின்ற ஸ்ரீமதுபயவே. காளி. ரங்காசார்ய ஸ்வாமி பண்டித ச்ரேணியில் ஸுப்ரஸித்தர். ஒரு ஸமயம் புதுக்கோட்டைக்கு விடைகொள்ள நேர்ந்தபோது இந்த ஸ்வாமியின் திருமாளிகையே புகலாயிற்று. ஸ்வாமி ஸ்வரூபக்ரந்த ப்ரவசநங்கள் செய்து கொண்டும் க்ரந்த ரசனைகள் பண்ணிக்கொண்டும் ப்ரஹ்மானந்தமாகப் போதுபோக்கி வருகிறாரப்போது. ஸ்வாமிக்கு மதத்ரய நிரூபகரென்று அந்வர்த்தமான விருது. ஒருவருடைய தாக்ஷிண்யத்திற்கும் கட்டுப்படாமலும் அந்தரங்க ஸாக்ஷ்யத்தை வஞ்சியாமலும் தமது திருவுள்ளத்தில் பட்டதை வெளியிடுகிறபான்மை இந்த

ஸ்வாமி பக்கலிற் காணும் சிறந்த திருக்குணம். இவருடைய திருக்குமாரர் வடநாட்டில் ப்ரதிஷ்டித பதவியில் இருப்பதால், ஏழெட்டு வருஷங்களாய் அவரோடு கூடவே கரக்பூர், கல்கட்டா முதலான விடங்களில் வஸித்து, தற்காலம் டில்லி மாநகரை அலங்கரித்து வருகிறார். மாதந்தோறும் இருமுறை தப்பாமல் ஸ்ரீமுகம் ஸாதித்துக் கொண்டிருப்பர். அடியேனுடைய வெளியீடுகளையெல்லாம் நிஷ்பக்ஷபாதமாகக் கடாக்ஷித்து அக்ருத்ரிமமாக மகிழ்ச்சி காட்டுமவர்களில் இந்த ஸ்வாமி முதல் ஸ்தானம் வஹிப்பவர். அடியேன் சில க்ரந்தங்களை யெழுதுவதற்கு இந்த ஸ்வாமியின் நியமனமும ப்ரோத்ஸாஹநமும் நிதானமாவதுண்டு. ஞானம் வயது சீலம் முதலான எல்லாவற்றிலும் முதியரான இந்த ஸ்வாமி திறத்தில் *வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே* என்றநுஸந்தித்து நிற்கிறேன்.

சென்னைமாநகரில் ஸ்ரீமான் கொஞ்சேடி சேஷாசலச்ரேஷ்டியென்கிற பாகவதோத்தமரைப்பற்றி ஆனந்தமாகச் சில வார்த்தைகளை யெழுத விரும்புகிறேன். இங்கு என் பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர் அவரே. அவர்



(நிற்பவர்) சென்னை கொஞ்சேடி சேஷாசலச்ரேஷ்டியென்னும் பரமபாகவதோத்தமர்

வைச்யஜாதியிற் பிறந்தவராயினும் * ஸிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்* என்கிற பிரமாணவசனத்தை ஸ்மரிப்பிக்கக்கூடிய மஹான் இவர். இவரை ஜீயரென்றே வழங்கி வருகிறார்கள். அஹங்காரலேசமுமற்று பாகவத ப்ராவண்யமே வடிவெடுத்தவரிவர். ஸ்ரீமதுபயவே காரப்பங்காடு தேசிக வரதாசார்ய ஸ்வாமியை அறியாதாரில்லை. அவர் கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயராகவும் சில வாண்டுகள் எழுந்தருளியிருந்தவர். அந்த ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் சென்னைமாநகரி

லெழுந்தருளியிருந்து காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருக்கையில் இந்த சேஷாசலபக்தர் அவரிடத்தே ப்ரவணராய் ஸுசிக்ஷிதரானவர். இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாக நம்மோடு நெருங்கிப்பழகி வருகின்ற இவருடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைக் கவனிக்கும்போது மிகுந்த விஸ்மயமே உண்டாகிறது. பகவதபசார பாகவதாபசாரங்களைக் கனவிலுமறியாதவர். ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலும் ஸகல வித்வான்களிடத்திலும் ஸமரீதியான பக்தி பூண்டவர். முமுக்ஷுப்படியில் த்வயப்ரகரணத்தின் முதல் சூர்ணையில் "இருக்கும்நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணானுபவ கைங்கர்யங்களே போது போக்காகையும்" என்றருளிச் செய்தபின் "இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமறிந்து உகந்திருக்கையும்" என்றருளிச் செய்தவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் இந்த நிஷ்டையுண்டாவது மிகவரிதென்று திருவுள்ளம் பற்றுகிறார். அந்த மாமுனிகள் இந்த பக்தாக்ரேஸரரைக் காண நேர்ந்தால் மிகவுகந்தருள்வரென்னத் தட்டில்லை. இவரைக் காணும்போது "முற்காலத்தில் திருக்கச்சிநம்பி போல்வார் இப்படித்தான் எழுந்தருளியிருந்திருப்பர் போலும்" என்று நினைக்க வேண்டியதாகிறது. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்களை உள்ளும் புறமுமொக்க வஹிப்பவர்களிலே ப்ரதம பரிகணநீயரானவிவர் "வேதகப்பொன் போலே" என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்திக்கு லக்ஷ்யபூதரென்றே நமது கொள்கை. அஸ்மதாசார்யரான ஸ்ரீகாதி ஸ்வாமியின் நியமனத்தினால் ஒருவிசை பாம்பேநகரத்தில் பனஸவாடியில் திருவேங்கடமுடையான் ப்ரஹ்மோத்ஸவத்திற்கு அடியேன் விடைகொள்ள நேர்ந்தது; அப்போது இவரையும் கூடவழைத்துக் கொண்டு சென்றேன். அந்த ஸ்வாமி ஒரேநாள் இவருடைய ப்ரக்ரியைகளைக் கண்டு மிகமிக விஸ்மயப்பட்டருளினார். தம்முடைய ஸந்நிதியிலேயே இவரை நிறுத்திக்கொள்ளவும் ஆசைப்பட்டார்.

பாம்பேநகர் ப்ரஸ்தாவம் வந்தபடியால் மற்றொரு ஸந்தோஷச்செய்தியும் இங்கு எழுதுகிறேன். ப்ரஹ்மஸ்ரீ P. K. ராஜகோபாலையரென்பவர் அவ்விடத்தில் ப்ரதிஷ்டித பதவியில் அமர்ந்திருக்கிறார். அவரோடு நமக்கு முன்பரிசயம் கிடையாது, பரிசயமேற்படப் ப்ரஸக்தியுமிருந்ததில்லை. அவர் தாமாகவே என்னிடத்தில் பரமப்ரேமம் கொண்டார். எனக்கு ஸுதர்சநாசார்யரென்று அவர் பெயரிட்டிருக்கிறார். இந்தத் தன் சரிதையில் முதற்பகுதியில் பக்கம் 8ல் ஸேவை ஸாதிக்கின்ற வித்வத் ஸார்வபௌம ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை, புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் திருவடிகளேயாவர் ஸ்ரீகாதி ஸ்வாமி. அவர்களிருவரும் ஸ்ரீஸுதர்சந பகவதநுக்ரஹத்தை அபரிமிதமாகப் பெற்றவர்கள். ஸ்ரீ காதி ஸ்வாமி தாம் ஸ்தாபித்தருளின முத்ரணாலயத்திற்கும் ஸ்ரீஸுதர்சந அச்சுக்கூடமென்றே நாமகரணம் செய்தருளினார். தமது திருமாளிகையின் சிகரத்திலும் ஸ்ரீஸுதர்சநாழ்வானையே மிகப்பெரிய திவ்யமங்கள விக்ரஹமாக ப்ரதிஷ்டிப்பித்து வழிப்போக்கர்களும் எளிதாக ஸேவித்து வாழும்படி செய்தருளியிருக்கிறார். அந்த ஸ்வாமியின் கடாக்ஷ விசேஷத்தினால் அடியேன் ஸுதர்சந பகவத் ப்ரஸாத விசேஷத்தை லவலேசம் பெற்றிருப்பதுண்டு. அதனாலேயே அடியேன் மிகவும் கடினமான ஸ்ரீஸுதர்சநசதகத்திற்கு இளமையிலேயே வியாக்கியானமெழுதி வெளியிட பாக்கியம் பெற்றேன். இந்த விஷயங்களெல்லாம் இந்த ராஜகோபாலையரவர்களுக்குத் தெரிய ப்ரஸக்தியில்லை; உண்மையில் இன்னமும் இவை தெரியாதிவர்க்கு. இவர் முதன்முதலாக நமக்குக் கடிதமெழுதத் தொடங்கும்போதே 'ஸ்ரீஸுதர்சனாசார்யர் ஸன்னிதானத்திற்கு' என்றே எழுத ஆரம்பித்து விட்டார். 'அது என்னுடைய பெயரன்று' என்று நான் தெரிவித்துங்கூட நாளைக்கும் அவ்வண்ணமாகவே தானெழுதி வருகிறார். இது பகவதாஜ்ஞை போலும் என்று நினைத்தேன். இவர் நம்மைத் தம்மில்லத்திற்கு வரவழைத்து ஸ்ரீஸுதர்சனாழ்வான் பெருமையை உபந்யஸிக்கவும் கோரினார். அப்படியே நடந்தது. இதையெல்லாம் நோக்குமிடத்து இவரிடத்தில் ஏதோ விலக்ஷணமான தைவசக்தி



ப்ரஹ்மஸ்ரீ P. K. ராஜகோபாலையரவர்கள்
Bombay

யிருக்கிறதென்று நமக்கு மிகவுகப்பு உண்டாயிற்று. பெறுதற்கரிதான இவருடைய அன்பு சுக்லபக்ஷ சந்திரன்போல் வளர்ந்து வருவது பகவத் ஸங்கல்ப நிபந்தனம்.

மசூலிபட்டணம் என்கிற பந்தர் ஸமீபத்தில் சிட்டிகூடூர் என்பது ஒரு சிறு அக்ரஹாரம். இவ்விடத்தில் ஸ்ரீமான் S. T. G. வரதாசாரியரென்பவர் ஸ்ரீநரஸிம்ஹ காலேஜ் என்னும் பெயரால் ஒரு ஸம்ஸ்க்ருத வித்யாலயம் ஸொந்தமாக ஸ்தாபித்து 25—30 வருஷ காலமாக நடத்தி வருகிறார். இவர் ஸ்வயம் வித்வான்; விசேஷ தனிகருமாவர். இவரை ஸம்ஸ்க்ருத பண்டிதவுலகம் பெரும்பாலுமறியும். இரண்டொரு ஸமயம் நாம் இந்த காலேஜுக்குச் சென்று பர்யவேக்ஷணம் பண்ண ப்ராப்தமாயிற்று. ப்ராயேண எல்லா மதஸ்தர்களும் இங்கு ஸாஹித்யமும் சாஸ்த்ரங்களும் பயில்கின்றார்கள். இந்த வித்யாலயத்தில் வாசித்துத்தேறி வெளிவந்த பண்டிதர்கள் ஆந்த்ரமாகாணத்தில் பல பேர்கள் காணப்படுகிறார்கள். அவர்களுடைய ஆசார வ்யவஹாரங்கள் ஒருவிதமாக இருந்தாலும் ஒவ்வொருவரும் நல்ல பண்டிதராகக் காணப்படுவர். இந்த வித்யாலயத்தில் வெகுகாலம் வியாகரணோபாத்யாயராக இருந்து, பிறகு பந்தர், விஜயநகரம் முதலானவிடத்து வித்யாலயங்களிலுமிருந்து, தற்காலம் வால்டேர் விச்வ வித்யாலயத்தை அலங்கரித்திருக்கின்ற ஸ்ரீமத் கரி. ராமாநுஜாசார்ய ஸ்வாமி யென்பவர் எனக்கு இருபது வருஷகாலமாகப் பரமாப்தர். இவர் மஹாபாஷ்யாந்த வித்வான் என்பது மட்டுமல்லாமல் வியாகரண சாஸ்த்ரத்தில் மிகவும் ஆழ்ந்த நிருபகர். இவர்க்கு ஸ்வக்ராமம் ஸிம்ஹாசலம். சாஸ்த்ரப்ரவசனமே போது போக்காகக் கொண்டிருக்குமிவர் பலவித்யார்த்திகளை உத்தீர்ணராக்கி யிருக்கின்றார். காஞ்சிக்கும் சென்னைமாநகர்க்கும் ஸமயவிசேஷங்களிலே வந்திருந்து ப்ரேமஸம்பத்தை அபிவிருத்தி செய்து போருமிவர்க்குப் பல்லாண்டு பல்லாண்டென்போமத்தனை. இத்தகைய ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகளைப்பற்றி யெழுதிக் கொண்டு போனால் மஹாபாரதத்திற்கும் மேலாக எழுதலாம். ஆவலில் குறையில்லை; இதையெல்லாம் ஆசையோடு பார்ப்பவர் இருப்பர்களோவென்கிற ஸந்தேஹத்தினால் ஸம்க்ஷேபிக்கலாகிறது.



ஸ்ரீமத் S. T. G. வரதாசாரியர் சிட்டிகூடூர் ஸம்ஸ்க்ருத காலேஜ் ஸ்தாபகர்

கீழ் மூன்றாம் பகுதியில் பக்கம் 189ல் என்னுடைய க்ரந்தமாலா ப்ரசுரங்களைப்பற்றி ப்ரஸ்தாவமெடுத்து "இதைப்பற்றி மேலே விரிவாகத் தெரிவிக்க


ப்ராப்தமாகும்" என்று விட்டிருக்கிறேன். இருபத்தைந்து வருஷ காலமாக நமது க்ரந்தமாலா கார்யாலயம் மூலமாகப் பலவகை க்ரந்தங்களின் பதிப்பு நடைபெற்று வருகின்றது. நமது பூர்வாசாரியர்க ளருளிச்செய்த மூல க்ரந்தங்கள் வியாக்கியான க்ரந்தங்கள் பெரும்பாலும் இந்த கார்யாலய த்வாரா தேவநாகரி, தெலுங்கு, தமிழ் லிபிகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன; வெளியிடப்பட்டும் வருகின்றன. ஸ்வாமி யெம்பெருமானாருடைய ஸகல க்ரந்தங்களும் பகவத் ராமாநுஜ க்ரந்தமாலை யென்கிற பெயரால் இருபது வருஷங்களுக்கு முன் தெலுங்கு லிபியில் வெளியிடப்பட்டன. அது ஐந்தாறு வருடங்களுக்கு முன்னமே நிச்சேஷமாக ஆய்விட்டபடியால், சென்ற வருஷத்தில் அதுவே ஸர்வதேச வ்யாபியான தேவநாகர லிபியால் வெகு நேர்த்தியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத் வேதாந்த தேசிகனருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும் "ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலா" என்னும் பெயரால் ஒன்பது ஸம்புடங்களாக வெளியிடப்பட்டிருப்பது நாடு நகரமும் நன்கறிந்ததாகும் இதில் சில ஸம்புடங்களுக்குப் புநர்முத்ரணம் செய்ய வேண்டிய ஆவச்யகதை ஏற்பட்டதனால் அதுவும் க்ரமேண நடந்து வருகின்றது. மணவாள மாமுனிகளருளிச் செய்த ரஹஸ்ய வியாக்கியானங்களெல்லாம் 'ஸ்ரீமத் வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா' என்னும் பெயரால் தெலுங்கு லிபியில் வெளியிடப்பட்டிருக்கின்றன. பகவத் விஷயம் ஈடு முப்பத்தாறுயிரப்படி மட்டும் நித்ய காலக்ஷேபத்திற்கு அர்ஹமாம்படி தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் இரண்டிரண்டு ஸம்புடமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்படியாக நடந்து வரும் க்ரந்தப் பிரசுரங்களை யாவரும் தெரிந்து கொள்ளப்பாங்காக இந்த நான்காவது பகுதியில் சிலசில பக்கங்களிலே கீழே குறிப்புரைபோல் விளக்கி வருவது குறிக்கொள்ளத்தக்கது. தனியாக ஸூசீ பத்திரங்களையும் வரவழைத்துப் பார்க்கலாம். இந்தப் பதிப்புகளெல்லாம் பல வூர்களில் பல அச்சுக்கூடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. நம்முடைய வாழ்க்கையில் இதுவொரு மிகப்பெரிய காரியம். பலரும் இதை அதிமாநுஷ க்ருத்யமென்றே பாராட்டுவர்கள். இதை நாமே எழுதிக்கொள்வது அநுசிதமாயினும் சில ஸமயங்களில் நாமும் வியப்படைய வேண்டும்படி இஃதிருப்பதனால் *யானே தவஞ்செய்தேன்* என்ற ஆழ்வார் முறையில் விஜ்ஞாபிக்கிறபடி. இவ்வரிய பெரிய காரியங்களெல்லாம் இங்கே ஸேவை ஸாதிக்கின்ற நமது ஜ்யேஷ்ட ஜாமாதாவின் ஸஹயோகத்தினாலேயே ஒழுங்குபட்டு நடந்து வருகின்றன. இவர்க்கு M.A. என்கிற பட்டமிருப்பதைக் கண்டு ஆங்கிலம் பயின்றவர் போலும் என்று மட்டும் நினைத்து விடலாகாது. நியாய வேதாந்தங்களைப் பரிபூர்த்தியாக வரியடைவே கற்றவர். மற்றும் அனேக தந்த்ரங்களின் மரியாதைகளை நிஷ்களங்கமாக நிலைகண்டவர். விமர்சசக்தியே வடிவெடுத்தவர். ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் ஆழ்ந்தபரிசயம் பெற்றவர். வடநாட்டில் உஜ்ஜயிநீ ப்ராந்தங்களிலும் ஸௌராஷ்ட்ர மண்டலங்களிலும் சிஷ்யஸம்பத்து உடையவராகையாலே ஹிந்தீ,



ஸ்ரீமதுபயவே வித்வான் அக்காரக்கனி ஸம்பத் குமாராசாரியர். M.A. (பெரிய ஜாமாதா)

குர்ஜரம் முதலான பாஷைகளிலும் விசதவிஜ்ஞானம் பெற்றவர். கிம்பஹுனா? ஸர்வாத்மனா அதிசயிக்கத்தக்க அறிவாளி. பரமகாருணிகனான எம்பெருமான் ஸங்கல்பித்த இவருடைய ஸஹயோகத்தினால்தான் நம்முடைய க்ரந்தமாலா ப்ரகாசனங்கள் நாற்றிசையும் நறுமணங்கமழ நிற்கின்றன. [கீழே பக்கம் 153ல் இவருடைய திருத்தகப்பனார் பெருமைகள் விவரிக்கப்பட்டிருப்பதும் காண்க.]

1939ஆம் ஆண்டில் ஸ்ரீகாஞ்சியில் நம்பிள்ளை ஸன்னிதியமைக்க நேர்பட்டதும் அடியேனுடைய வாழ்க்கையில் தனிப்பட்டதொரு பாக்யவிசேஷம். நம்பிள்ளை ஸன்னிதி நிர்மாணத்தைப்பற்றின ஆலோசனை அடியேனுடைய



ஸ்ரீகாஞ்சீ ஸன்னிதி வீதியில் நம்பிள்ளை ஸன்னிதி

நெஞ்சில் ஒரு மூலையிலும் ஒரு நாளிலுமிருந்ததில்லை. காஞ்சியில் நம்பிள்ளை திருப்ரதிஷ்டை செய்ய வேணுமென்கிற எண்ணம் மட்டுமிருந்தது. அடியேனுடைய வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலைக்கென்று ஒரு பெரிய கட்டிடம் ஏற்பட்டிருக்கிறபடியால் அதிலேயே நம்பிள்ளையை யெழுந்தருளப்பண்ணி ஆராதிக்கலாமா என்கிற ஆசை 30, 35 ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு சிறிது தோன்றியிருந்ததுண்டு. இது சாச்வதமாக நிர்வஹிக்க வேண்டிய விஷயமாதலால் அல்பசக்திகரான நமக்கு இது நெஞ்சாலும் நினைக்கத் தகாததென்று அவ்வாசையை அப்போதே விலக்கிக் கொண்டேன். ஆனாலும் *இருகரையுமழிக்கும் க்ருபாப்ரவாஹமுடையவனென்று போற்றப்படுகின்ற எம்பெருமானுடைய திருவுள்ளத்தை யாரேயறிவார்? இந்த அத்புத ஸங்கடனையைப்பற்றிச் சிறிது விவரித்தெழுத ஆசை கிளர்கின்றது. தேவப்பெருமாளுடைய ஸன்னிதித் திருமுன்பே [மேலண்டை கோபுரத்தின் முன்னணியில்] இந்த நம்பிள்ளை ஸன்னிதி அமைந்திருக்கின்றது. ஸன்னிதிவீதியில் வடவண்டை வாடையில் 39 லக்கமுள்ள இந்தத் திருமாளிகை ஒரு

வடகலை ஸ்வாமியின் க்ருஹமாக இருந்து வந்தது. ஸ்ரீமதஹோபிலமடாதிபதி யாஸ்தானத்தை அலங்கரித்திருந்த ஸ்ரீமத்பரமஹம்ஸ இஞ்சிமேட்டழகிய சிங்கர் பூர்வாச்ரமத்தில் இந்த பவனத்திலே நெடுநாள் குடிவாழ்ந்து வந்ததுண்டு. இந்த க்ருஹஸ்வாமியானவர் இந்த க்ருஹத்தை விற்பனை செய்துவிட வேணுமென்று முப்பது ஸம்வத்ஸரங்களுக்கு முன்னமே முயற்சி செய்திருந்தார். 1927ஆம் வருஷத்தில் அஸ்மதாசார்யரான ஸ்ரீகாதி ஸ்வாமி இந்த க்ருஹத்தை வாங்கி ப்ரதிவாதிபயங்கர மடமாக ஸ்தாபிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றிப் பன்னீராயிரம் ரூபாய் விலைக்கு முடிவு செய்யப்பட்டுமிருந்தது. அப்போது ஸ்ரீஸ்வாமி வடநாட்டில் எழுந்தருளியிருந்தபடியால் அந்த விலைத்தொகையும் அடியேனிடம் வந்து மூன்றுமாதம் தங்கியிருந்தது. அப்போது இந்த க்ருஹவிக்ரயம் ஏதோ ஸ்பர்த்தா விசேஷத்தினால் பலரால் ஆக்ஷேபிக்கப்பட்டுத் தடைபெற்று நின்றது. அதன்பிறகு ஸ்ரீஸ்வாமி ஸன்னிதி வீதியிலேயே தென்னண்டைவாடையில் அஹோபில மடத்தின் அடுத்த கீழண்டை பக்கத்து க்ருஹத்தை வாங்கி உத்தாரம் செய்திருக்கிறார். ஸ்ரீஸ்வாமி தமது மனோரதங்கள் நிறைவேறப்பெறாமலே திருநாடலங்கரிக்க நேர்ந்து விட்டது. அதுநிற்க.

இப்போது நம்பிள்ளை ஸன்னிதியாக அமைந்திருக்கின்ற திருமாளிகையின் ஸொந்தக்காரரானவர் [இற்றைக்கும் வாழ்ந்து கொண்டிராநின்ற ஸ்ரீமான் புதுச்சேரி க்ருஷ்ணமாசாரியர்] 1939ஆம் வருஷத்தில் ஆனி மாதத்தில் ஒருநாள் நடுநிசியில் அடியேனுடைய க்ருஹத்திற்கு வந்து துயிலெழுப்பி "ஒரு சிறிய விஜ்ஞாபனம்; சற்று வெளியில் எழுந்தருளவேணும்" என்றார். அடியேன் உணர்ந்து வெளியேவந்து என்ன செய்தி? என்றவாறே "என்னுடைய க்ருஹத்தின்மேல் கடன்தொல்லை மிகவும் சிரமமாகவிருக்கிறது; அதை இப்போது விற்பனை செய்துவிட வேணுமென்று தீவிரமாக முடிவு செய்துவிட்டேன். 10, 12 வருஷங்களுக்கு முன்பு பன்னீராயிரம் ரூபாய்க்கு தேவரீரே முடிவு செய்திருந்தது ஞாபகமிருக்கும். வீணைக் கலஹக்காரர்களின் வார்த்தையைக்கேட்டு இழந்தேனப்போது. இப்போது அவ்வளவு விலையில் நான் ஆசைவைப்பதற்கு நியாயமில்லை. நாலாயிரம் ரூபாய்க்குக் கொடுத்து விடுகிறேன். கிருபைபண்ணி வாங்கிக்கொள்ளவேணும். இந்த ஸமயம் கைகொடுத்து ரக்ஷிக்கவேணும். தேவரீர் உபேக்ஷித்தால் வீடே கடனில் மூழ்கிப் போய்விடும்; எவ்விதமான சாக்குப்போக்கும் சொல்லாமல் கிருபைபண்ணியே யாகவேணும்" என்று தயநீய தசையை அபரிமிதமாகக்காட்டி வேண்டிக் கொண்டார். அக்காலத்தில் ஸ்ரீமான் அழகு செய்யூர் (அழிசூர்) ஸ்ரீநிவாஸாசாரியர் என்பவர் அடியேனுடைய பாடசாலையில் வேதோபாத்யாயராயும் அடியேனுடைய ஸர்வகார்ய துரந்தரராயும் இருந்து வருகிறார். அவரையும் இவர் புரஸ்கரித்துக் கொண்டுவந்து வெகு நிர்ப்பந்தம் செய்தார். அந்த ஸமயத்தில், நாலைந்து வருஷங்களுக்கு முன்பு அடியேனுடைய க்ருஹத்தை ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் உத்தாரம் செய்திருந்தபடியால் வேறு க்ருஹம் வாங்க வேணுமென்கிற விருப்பம் சிறிதுமில்லாமலிருந்தபடியால் 'தற்காலம் எனக்கு ஆவச்யகதை இல்லையே!' என்று சொன்னேன். அதற்கு அவர் "அப்படி சொல்லி விடக்கூடாது; சென்னையில் பல பெரியமனிதர்களுண்டு; யாருக்காவது தேவரீர் நியமித்தால் ஆகாததன்று; தேவரீர் மனம் வைத்தால் அநாயாஸமாக நிறைவேறக்கூடியதே இது; எப்படியாவது க்ருபை பண்ணியே யாகவேணும்; விலையில் சிறிது குறைத்துக்கொள்ள வேணுமானாலும் குறைத்துக்கொள்வது; எந்த விதத்திலும் தேவரீரே கதி; தேவரீரே வழிகாட்டியாக வேண்டும்" என்று சொல்லி விழுந்து விழுந்தெழுகிறார். 'ஸரி, பார்ப்போம்; போய்வருவது' என்று சொல்லி யனுப்பிவிட்டேன். அப்போது இரவு ஒருமணியிருக்கும். அதன் பிறகு தூக்கம் கொள்ளவில்லை. அவருடைய தயநீயதசையை

நினைக்க நினைக்க, எப்படியாவது இவருடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்து வைக்க வேணுமென்று திடமான ஊக்கமுண்டாயிற்று. உபாயசிந்தனை பண்ணிக் கொண்டேயிருக்கையில் கண்ணுறங்கிற்று. அப்போது ஒரு சிறிய கனவு. ஸ்ரீஹஸ்தி சைல சிகரத்தில் கர்ப்பக்ருஹத்தின் திருமுன்பே கோலப்படியில் தேவப்பெருமாள் கீழே புறப்பாடு கண்டருள்வதற்காக எழுந்தருளியிருக்கிறார்; அங்கே அடியேன் ஸேவித்துக் கொண்டு நிற்கிறேன். ஒரு அர்ச்சகர், ஒரு பரிசாரகர் தவிர அங்கு வேறு யாருமில்லை. அப்போது பெருமாள் திரு மேனியில் ஒரு புஷ்ப ஸரங்கூட இல்லை; அர்ச்சகர் பெரிய பெருமாளிடம் விரைந்து சென்று ஒரு புஷ்பத்தண்டையைக் கொண்டு வந்து கையில் கொடுத்து ஸ்ரீசடகோபன் ஸாதிக்கிறார். அதைப் பெற்றுக்கொண்டு பரமபாக்யம்! என்று சொல்லி நிற்கிறேன். அதே க்ஷணத்தில் நித்யப்ரதக்ஷிண பாரா யண கைங்கர்ய ஸமயம் ஸந்நிஹிதமானபடி யாலே பாடசாலையில் கணகணகணவென்று சோமங்கலமடிக்கும் பேரரவம் செவிப்படு கின்றது; உடனே கண்விழித்தெழுந்தேன். இதுவொரு பெரிய சகுனமாகவும், பேரருளா ளன் திருவுள்ளமுகந்து நியமிக்கிறபடியாக வும் தோன்றிற்று. அதனால் மிகுந்த வுத் ஸாஹமுண்டாகி நித்ய ப்ரதக்ஷிணபாராயண கைங்கரியத்தை முடித்துக் கொண்டு தீர்த்த மாடி விட்டு பெங்களூர் புறப்படுவதென்று நிச்சயித்தேன்.



ஸ்ரீகாஞ்சீ—தேவப்பெருமாள்

சென்னைவாஸிகளான வைச்யர்களில் எனக்குப் பரமாப்தர் ஊரா. ஸ்ரீராமுலு செட்டியாரென்பவர். கீழே மூன்றாம்பகுதியில் பக்கம் 165ல் இவரு டைய உருவப்படம் காணத்தக்கது, இவருடைய அபிமான விசேஷங்களையும் அங்குச் சிறிது ப்ரஸ்தாவித்திருக்கின்றேன். இந்த செட்டியார் அப்போது கோடைகால விச்ராந்திக்காக பெங்களூர் சென்றிருந்தபடியால் அங்குச்சென்று இவரிடம் சொல்லி அந்த ஸன்னிதிவீதி க்ருஹத்தை விலைக்கு வாங்கச் செய்யலா மென்கிற நோக்கத்துடன் அன்றே அவ்விடம் புறப்பட நிச்சயித்தேன். உடனே அந்த க்ருஹஸ்வாமியை ஸந்தித்து க்ருஹத்தின் க்ரயத்தொகை விஷயமாக ஒரு முடிவு செய்து கொள்ள வார்த்தையாடி இரண்டாயிரத்தெழு நூறு ரூபா யென்று முடிவு செய்து கொண்டு புறப்பட்டு அன்று மாலையிலேயே பெங்களூர் சென்று சேர்ந்து ஸ்ரீராமுலு செட்டியாரைச் சந்தித்தேன். அப்போதும் எனக்கு நம் பிள்ளை ஸன்னிதி நிர்மாண உத்தேசம் சிறிதுமிருந்ததில்லை. தேசாந்தரிஸ்வாமிகள் தங்கும் விடுதியான ராமாநுஜகூடமாக இந்த க்ருஹத்தை உபயோகப்படுத்தவே எண்ணமிருந்தது. செட்டியாரிடம் நான் சொன்னது இவ்வளவே—“காஞ்சீ புரத்தில் ஸன்னிதி வீதியில் கோபுரத்வார ஸமீபத்தில் ஒரு க்ருஹம் விற்பனைக்கு வருகிறது; இதை நீர் விலைக்கு வாங்கிக் கொண்டால் நாளடைவில் அதை எவ்வித மாகவாவது உபயோகப்படுத்திக் கொள்ளலாம்” என்று. அதற்கு அவர் உடனே பதில் சொல்லி விட்டார்—“காஞ்சீபுரத்தில் எனக்கு க்ருஹம் எதற்கு? கதாசித் நான் அவ்விடம் வந்தால் ஸ்வாமி திருமாளிகை இருக்கவே யிருக்கிறது; இது அநபேக்ஷிதம்” என்றார். அதன் மேல் நான் சொன்னதாவது—“நீர் வாங்கிக்

கொள்ள ஸௌகரியமில்லையானால் ஸரி; நான் வாங்கிக் கொள்ளுகிறேன்; தற்காலம் இதற்கு வேண்டிய பொருளுதவி செய்ய வேணும்" என்றேன். அதற்குத் தடையேயில்லையென்று சொல்லி, சென்னையிலுள்ள தமது பிரதிநிதிக்கு உடனே கடிதம் எழுதிக் கொடுத்து விட்டார்—'ஸ்வாமி அபேக்ஷிப்பது போல் தடையில்லாமல் பணம் கொடுப்பது' என்று. அக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டு மறுநாள் காலை சென்னை சேர்ந்து பணத்தை ஸித்தப்படுத்திக் கொண்டு ஊர் வந்து சேர்ந்து அந்த க்ருஹஸ்வாமியிடம் செய்தி சொன்ன வளவில், அவர் வாடின முகத்தோடு "முன் போலவே இப்போதும் சில பாபிகள் காரியம் நிறைவேற மாட்டாதபடி கலஹங்களைப் பண்ணுகிறார்கள்; என்ன செய்வேன்? ஒரு வாரத்திற்குள் நாலாயிரம் ரூபாய்க்கே விற்பனை செய்து கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு வாரம் பார்க்கிறேன்; ஒன்றுமில்லையானால் தேவரீருடைய க்ருபையையே நாடி வருகிறேன்" என்றார். அப்படியே செய்வதென்று சொல்லிவிட்டேன்.



ஸ்ரீமான் உவே. வேங்கடநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி (முதுனூர்பாடு) (வைகுண்டவாஸி)

அந்த ஸமயம் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் திருவாடிப் பூரமஹோத்ஸவம் ஸேவிக்க அடியேன் போய்வர வேண்டியிருந்தது. கீழ் மூன்றாம் பகுதியில் பக்கம் 189ல் ஸேவை ஸாதிக்கின்ற ஸ்ரீஉவே. அ. மு. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அப்போது காஞ்சீவாஸம் செய்து கொண்டிருந்தபடியால் அவரிடம் பணத்தைக் கொடுத்து "க்ருஹவிக்ரயம் ப்ராப்தமானால் தேவரீரே முன்னின்று முடிப்பது" என்று சொல்லிவிட்டு அடியேன் ஸ்ரீவில்லிபுத்தூர் போய் விட்டேன். போனவொரு வாரத்திற்குள் விக்ரயம் முடிவு பெற்று ரிஜிஸ்டருமாய் விட்டதென்கிற செய்தி அடியேனுக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் திருமுன்பே தெரியவந்தது. பிறகு ஊர் வந்து சேர்ந்த பின் ஆடி மாதத்திலேயே ஹஸ்த நக்ஷத்திரத்தன்று க்ருஹநிர்மாணம் தொடங்கலாயிற்று.

மேற்கு கோதாவரி ஜில்லாவில் முதுனூர்பாடு என்பது ஓர் அக்ரஹாரம். அவ்விடத்தில் ஸ்ரீமான் வேங்கடநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி யென்கிற பெரியவர் மஹாதனிகர். மிகப்பெரிய

ஜமீன்தாரி. அளவிறந்த தருமங்கள் செய்தவர். அந்த மஹான் யாத்ருச்சிகமாக அப்போது காஞ்சீபுரம் வந்திருந்து நமது பாடசாலையைச் சேர்ந்த ஹாஸ்டலில் தங்கியிருந்தார். ஸன்னிதி வீதியில் க்ருஹநிர்மாணம் தொடங்கினவன்று அப்பெரியார் அங்கிருந்தார். அப்போது ராமாநுஜகூட நிர்மாணமென்கிற அபிஸந்தியேயிருந்தது. அதற்காக அப்பெரியார் அன்றே ஆயிரத்துநூற்றுப் பதினறு ரூபாய் நன்கொடை யளித்தார். அஸ்திவாரத்திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. "நம்பிள்ளை ஸன்னிதி கட்டப்படுகிறதாம்" என்று ஊரில் ப்ரவாதமுண்டாயிற்று. வஸ்துஸ்திதியில் அங்ஙனம் அடியேனுடைய உத்தேசமிருந்ததில்லை. ப்ரவாதமோ ப்ரபலமாகப் பரவிவிட்டது. வெளியூர்களி லிருந்தும் பலஸஹ்ருதயஸஹ்ருந்மணிகள் "நம்பிள்ளை ஸன்னிதி நிர்மாணமாகிற தென்று தெரியவந்தது; பரமஸந்தோஷம்" என்று கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. 'இங்ஙனே எம்பெருமானுடைய திருவுள்ளம் போலும்' என்று கொண்ட அடியேன் நம்பிள்ளை ஸன்னிதியேயாகுகவென்று அத்யவஸித்து விட்டேன். கீழ் இரண்டாம் பகுதியில் பக்கம் 105ல் வைதிக கோஷ்டியில் ஒன்பதாமவராக விளங்குகின்ற ஸ்ரீஉவே. தி. ந. ச. திருவேங்கடாசாரியர் "நம்பிள்ளையோடு கூட அவருடைய ப்ரதாநசிஷ்யர்களான வடக்குத்திருவீதிப்பிள்ளை பெரியவாச் சான்பிள்ளைகளையும் எழுந்தருளப்பண்ணினல் நலமாம்" என்று ப்ரஸ்தாவித்தார். இதுவும் எம்பெருமான் திருவுள்ளம்போலுமென்று கொண்டு அங்ஙனமே செய்யலாயிற்று.

மூன்று நான்கு மாதங்களில் கனவேகமாகத் திருப்பணி நடைபெற்று முடிந்தது. அப்போது முப்பதினயிரம் ரூபாய் செலவில் திருப்பணியாயிற்று. அடுத்த கார்த்திகை மாதத்திலேயே ரேவதியன்று திருப்ரதிஷ்டை நடைபெற நிர்ணயமாயிற்று. மழையோ வாசாமகோசரமாகப் பெய்து கொண்டிருக்கின்றது. தென்னிந்திய ரைல் மார்க்கங்கள் பெரும்பாலும் சிதிலமாகி ரைல் போக்கு வரத்தும் தடைபட்டிருந்தது. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பத்தில் திருப்ரதிஷ்டையை எப்படி நடத்துவது? தற்போது நிறுத்தி உத்தராயணத்தில் வைத்துக் கொள்ளலாமா? என்கிற ஆலோசனையும் இருந்து வந்தது. இதிகர்த்தவ்யதா மூடனய்த் திகைத் திருக்கையில் ஆழி மழைக்கண்ணன் கண் திறந்து விட்டான். ஒருவாரம் பத்து நாள் முந்தியே மழைநின்று ரைல் மார்க்கங்களும் செப்பனிடப்பட்டு விட்டன. ப்ரதிஷ்டா முஹூர்த்தம் நிஸ்ஸந்தேஹமாக நிர்த்தாரணம் பெற்றுவிட்டது. *இமவந்தந் தொடங்கி இருங்கடலளவும்* என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடியும் *ஆசைலாத் அத்ரிகந்யா சரண கிஸலயந்யாஸ தந்யோப கண்டாத் ஆரக்ஷோநீத ஸீதா முக கமல ஸமுல்லாஸ ஹேதோச் ச ஸேதோ:* என்று ஆளவந்தாரருளிச் செய்த படியும் தென்னடு வடநாடுகளிலிருந்து எண்ணிறந்த ஆப்தர்களும் பண்டிதர்களும் வைதிகர்களும் மண்ணும் மணமுங் கொள்ள வந்து குழுமி விட்டார்கள். இப்போது திருமலை திருப்பதியில் ஸ்ரீமத் பரமஹம்ஸ, சின்ன ஜீயர்ஸ்வாமியாக எழுந்தருளி யிருந்து ஸேவைஸாதித்தருளும் ஸ்ரீஸ்வாமி அப்போது பூர்வாச்ரமஸ்தராய்த் திருவல்லிக்கேணியில் ப்ரவசந நிரதராக எழுந்தருளியிருக்கின்றார்; அந்த ஸ்வாமி சிஷ்ய பரிவாரங்களுடனே எழுந்தருளியிருந்து அநுக்ரஹித்தது அடியேனுக்கு மிகவும் பெருமையாயிருந்தது. அந்த ஸமயம் ஐந்நூறு திருநாமங்களுக்குக் குறை யில்லாமல் எழுந்தருளியிருந்து ஸேவை ஸாதித்தவதிசயம் இற்றைக்கும் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்று நீங்காத காட்சி. வைதிக லௌகிகர்களும் மற்று முள்ள சிஷ்ய வர்க்கங்களும் சேர்ந்து ஆயிரம் வ்யக்திகளுக்குக் குறையில்லாதபடி குழுமி விட்டார்கள். இத்தனை பேர்களையும் ஐந்து நாள்களுக்கு எப்படி ஆராதிக்கப் போகிறோ மென்கிற கவலை அடியேனுக்குப் பெரிது முண்டாயிற்று. ஆனல் ஒரு

விஷயம் வெகு அவலேபத்துடன் விஜ்ஞாபிக்கிறேன் ;— விரலுக்குத் தகாத வீக்க மென்னும்படி அடியேன் ஸ்வசக்தியை மீறி ஸாஹஸமாகவே எவ்வளவு பெரிய காரியங்களை ஆரம்பித்தாலும் அவற்றை அநாயாஸமாகத் தலைக்கட்டிக் கொண்டு போகிறவன் எம்பெருமான். விசேஷித்து இந்த தைவபலம் அடியேனுக்குள்ளது. இதை நான் இருபதாவது வயதிலிருந்து ஏதத் க்ஷணபர்யந்தம் ஸ்வாநுபவத்தில் கண்டு வருகிறேன். ஆனாலும் அந்தந்த ஸமயங்களில் இது எப்படி நிறைவேறப் போகிறதென்கிற கவலை சிறிது தோன்றும். அதேக்ஷணத்தில் எம்பெருமான் "நானுனக்குக் கையாளா யிருக்க ஏதுக்குக் கவலை ?" என்று சொல்லுவான் போன்று எண்ணினதற்கு மும்மடங்காகக் கார்ய நிர்வாஹம் செய்து போருவன். திருப்ரதிஷ்டை ஸமயத்தில் உபஸ்திதர்களாயிருந்த பெரிய மனிதர்களெல்லாரும் எனக்குச் சிறிதும் கவலை யில்லாதபடி தாங்களே முன்னின்று எல்லாப் பொறுப்புகளையு மேற்று வெகு விபவமாக நடத்தி வைத்தார்கள். ஹைதராபாத் நகரத்தில் கந்திகல் மெட்டு என்னும் பகுதியில் ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி தேவஸ்தானத்தை நிர்வஹித்து வருகிற ஸ்ரீமதி. கொம்பெல்லி ஆண்டாளம்மாள் பகவத் பாகவதா சார்ய கைங்கர்ய துரந்தரையாய் ஸுப்ரஸித்தை. திருமலை திருப்பதி ப்ரதிவாதி பயங்கராசார்ய திருவடி ஸம்பந்தம் பெற்ற பரம வைஷ்ணவி. அந்த அம்மா திருப்ரதிஷ்டைக்கு முன்னடியே வந்திருந்தபடியால் வந்தவர்களுக்கெல்லாம் ததீயாராதன கைங்கர்யப் பொறுப்பைத் தான் பரம ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு நடத்திவைத்தது என்ஞான்றும் மறக்க முடியாதது. இவ்வண்ணமாக ஒவ்வொருவர் ஒவ்வொரு கைங்கரியத்தில் பொறுப்பேற்றுக்கொண்டு மொத்தத்தில் பதினாயிரம் ரூபாய் செலவில் ஐந்துநாள் திருப்ரதிஷ்டை மஹோத்ஸவம் மஹா ஸமாரோஹமாக நடந்தேறியது. இதற்கு அடியேன் உத்தேசித்திருந்த திட்டம் இரண்டு மூன்றாயிரத்திற் குட்பட்டதே. ஆயினும் ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான பேரருளாளன் தனதருள் வெள்ளத்தைப் பெருக்கினபடி வாசாமகோசரம். ஸ்ரீராஜமன்னார் ஸன்னிதியிலிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர நிபுணர்களான தீக்ஷிதர்கள் எழுந்தருளியிருந்து திருப்ரதிஷ்டையை வெகு சிறப்பாக நடத்திவைத்தார்கள். 1939 ப்ரமாதி ஸம்வத்ஸரம் கார்த்திகை மாதம் ரேவதியன்று திருப்ரதிஷ்டையாகி அன்றே தொடங்கித் திருக்கார்த்திகையளவும் நான்குநாள் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் நடந்தேறியது. இந்த ஸன்னிதியின் பின்பாகம் வெகு விஸ்தாரமான நிலமாதலால் அப்போது காலியாயிருந்த அவ்விடத்தை ராமாநுஜ கூடமாக்க வேணுமென்கிற மநோரதம் அப்போது திருப்ரதிஷ்டைக்கு வந்திருந்த சென்னைவாஸிகளான பக்த பாகவதோத்தமர்களுக்கு உதித்தது. ஏழெட்டு மாதங்களுக்குள்ளாகவே நாற்பதினாயிரம் ரூபா செலவில் நம்பிள்ளை ஸன்னிதியின் பின்புறம் முழுவதும் ராமாநுஜ கூடமாக நிருமிக்கப்பட்டு அந்நாள் தொடங்கியே தேசாந்தரிகளுக்கு ஸௌகரியமான வஸதியாக அமைந்துள்ளது. நம்பிள்ளை நிலயமென்று இதற்குப்ரஸித்தி.



கந்திகல்மெட்டு கொம்பல்லி ஆண்டாளம்மா ஹைதராபாத்

நம்பிள்ளை ஸன்னிதியின் நித்ய நைமித்திக க்ரமங்கள்

நம்பிள்ளை ஸன்னிதி திருப்ரதிஷ்டையான அந்நாள் தொடங்கி நித்ய நைமித்திக க்ரமங்களெல்லாம் ஏகரீதியாகவும் மிகச் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. தினப்படியாக இரண்டுவேளை திருவாராதனம்—காலை வேளையில் திருப்பாவை கோஷ்டி—மாலை வேளையில் நாலாயிர க்ரமமாக நித்யம் ஒரு பதிகம் ஸேவிப்பது—திவ்யதேச க்ரமத்திலே தீர்த்த ப்ரஸாத விநியோக கோஷ்டி நடைபெறுவது—உசிதமாக தேசாந்தரிகளை ஆராதிப்பது. இது நித்யக்ரமம். த்வாதசி தோறும் காலையில் திருமந்த்ரார்த்த கோஷ்டி. (அதாவது) முமுக்ஷுப்படி ஸேவித்து சாத்துமுறை செய்வது. திருவிசாகந்தோறும் ஆசார்யஹ்ருதயம். திருமூலந்தோறும் தத்வத்ரயம். திருவோணந்தோறும் ஸ்ரீவசநபூஷணம். இதையும் நித்யக்ரமமென்றே கொள்ளலாம். நம்பிள்ளை திருநக்ஷத்ரம் க்ருத்திகையாதலால் அன்று திருநெடுந்தாண்டகம் ஸேவித்துச் சாத்துமுறை செய்வது. பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம் ரோஹிணியாதலால் அன்று நாச்சியார் திருமொழி முடிவில் இரண்டு திருமொழிகள் ஸேவித்துச் சாத்துமுறை செய்வது. வடக்குத் திருவீதிப்பிள்ளை திருநக்ஷத்ரம் ஸ்வாதியாதலால் அன்று பெரியாழ்வார் திருமொழியில் ஆத்யந்தத் திருமொழிகள் ஸேவித்துச் சாத்துமுறை செய்வது. ரேவதி திருப்ரதிஷ்டா நக்ஷத்ரமாகையாலும், இவ்வாசார்ய வர்யர்களின் நித்ய ஸேவைக்கு உரியனுயிருந்த ஸ்ரீரங்கநாதனுடைய திருநக்ஷத்ர மாகையாலும் அன்று அமலனுதிபிரான் ஸேவித்துச் சாத்துமுறை செய்வது. இங்கு நம்பிள்ளையொருவர்க்கே மூலத் திருமேனியும் உத்ஸவத் திருமேனியுமுள்ளது. மற்றையாசிரியர்களிருவருக்கும் உத்ஸவத் திருமேனியே யுள்ளது. இவ்வாசார்யர்களுக்கு ஆராத்ய தேவதைகளாகப் பெரியபெருமாள் சக்ரவர்த்தி திருமகனுர் கண்ணபிரான் ஆண்டாள் இவர்களும் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கிறுர்கள். ஆழ்வாராசார்யர்களெல்லாருடையவும் வருஷத் திருநக்ஷத்திர நன்னுள் ஸேவை சாத்துமுறை விசேஷங்களுடன் குறையறக் கொண்டாடப்பட்டு வருகிறது. கார்த்திகை மாதத்தில் நம்பிள்ளையின் வருஷோத்ஸவம் பத்துநாள் இரண்டு வேளையும் இரண்டாயிரம் ரூபாய் செலவில் வெகு விசேஷமாக நடைபெற்று வருகின்றது. ஆனிமாதத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளை யுத்ஸவமும், ஆவணி மாதத்தில் பெரியவாச்சான்பிள்ளை யுத்ஸவமும் பத்துநாள் இரவுவேளை மட்டும் திருவாய்மொழியாயிரம் ஸேவையுடன் தனித்தனி 250 ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. பகவத் பாகவத க்ருபையினுல் இந்த நித்ய நைமித்திக க்ரமங்கள் சாச்வதமாக நடைபெற்று வரும்படி வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது. அடியேனுடைய வாழ்க்கையில் இது அசிந்திதமும் அப்ரதீக்ஷிதமும் அநந்ய லப்யமுமான விசேஷம். இதிலிருந்து பல மஹான்களுடைய பரமக்ருபைக்கும் ப்ரேமத்திற்கும் இலக்காகப் பெற்றேன். அப்படிப்பட்ட ப்ரேமவான்கள் நாற்றிசையிலும் நிரம்பியிருக்கிறுர்கள். அன்னவர்களில் காலஞ் சென்றவர்கள் பலர். ஜீவித்திருப்பவர்களும் பலர். அனேகருடைய உருவப்படங்கள் கிடைக்காமையினுல் அவர்களைப்பற்றி ப்ரஸ்தாவம் செய்வதற்கில்லை. அனேகருடைய உருவப்படங்கள் ஸம்பாதிக்கப்பட்டிருந்தும் கைதவறிவிட்டன. இவ்வண்ணமாக வொரு தன் சரிதைநூல் வெளியிடவேணுமென்கிற உத்தேசம் ஸமீப காலத்திலேயே தோன்றினபடியால், பல மஹான்களின் உருவப்படங்கள் கைப்பட்டிருந்தும் அச்ரத்தையினுல் கைசோரவிட நேர்ந்தது. சில மஹான்கள் எவ்வளவு பிரார்த்திக்கப் பட்டும் உருவப்படங்களை உதவுகின்றிலர். மீண்டும் அவர்களைப் பிரார்த்திக்கிறேன்.

பெங்களூர் ப்ராந்தத்தில் அம்ருதூர் என்னுமக்ரஹாரத்தில் ஸ்ரீமதுபயவே. ராமாநுஜாசார்ய ஸ்வாமி யெழுந்தருளியிருக்கிறுர். இந்த ஸ்வாமிக்கு இப்போது

எண்பது திருநக்ஷத்ரங்களுக்கு மேலாகிறது. வயதிற்போலவே ஞானத்திலும் சீலத்திலும் முதியரான இந்த ஸ்வாமி இளமையில் காஞ்சீபுரியில் எழுந்தருளியிருந்து ஸ்ரீமதுபயவே குன்றபாக்கம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸகாசத்தில் ந்யாய சாஸ்த்ர மதிகரித்தவர். அடியேனுடைய திருத்தகப்பனார்க்கும் மாதாமஹ ஸ்ரீஜீயர் ஸ்வாமிக்கும் பரம ப்ரேமபாத்ரமா யிருந்தவர். நம்பிள்ளை ஸந்நிதிக்கு விசேஷ கைங்கரியங்கள் செய்திருப்பவர். ஒரு பர்யாயம் வடநாட்டு யாத்திரை முழுவதும் பதரிகாச்ரம முட்பட இந்த ஸ்வாமியோடு கூடியிருந்து செய்ய ப்ராப்தமாயிற்று. * நிவாஸ வ்ருக்ஷஸ் ஸாதூநாம் ஆபந்நாநாம் பரா கதி:, தாதூநாமிவ சைலேந்த்ரோ குணநாம் ஆகரோ மஹாந் * என்னப்பட்ட சக்ரவர்த்தி திருமகனுடைய திருக்குணங்களை இந்த ஸ்வாமி பக்கலிலே மிகமிகக் கண்டு அதிசயித்தார்கள் உடனிருந்த யாவரும். இவர் திருமேனி பாடவத்தோடிருந்த காலத்தில் அடிக்கடி காஞ்சிக் கெழுந்தருளி ஸேவை ஸாதித்துக் கொண்டிருப்பர். இப்போது மிகவும் அசக்தரா யெழுந்தருளியிருக்கிறபடி. இந்த ஸ்வாமியின் திருக்குமாரர்கள் நல்ல பதவிகளில் ப்ரதிஷ்டிதர்களாக விளங்கிவருகிறார்கள்.



ஸ்ரீமதுபயவே.
A. S. ராமாநுஜாசார்ய ஸ்வாமி
ஜமீன்தார், அம்ருதூர்.

ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளைச் சேர்ந்த தென்திருப்பேரையில் வாழ்பவரான ஸ்ரீமதுபயவே. K ராமசந்திரய்யங்கார் ஸ்வாமியின் திருக்குணங்களிலே அடியேன் அறியாக்காலத்திலிருந்தே ஈடுபட்டவன். இந்த ஸ்வாமி லௌகிகமான உத்யோகத்திலமர்ந்து வாழ்ந்தவர் அதில் வெறுப்புக் கொண்டு சீக்கிரமாகவே விச்ராந்தி பெற்று பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய நிஷ்டராய் ஸத்க்ரந்த காலக்ஷேப நிரதராக விளங்கி வருகின்றார். இந்த ஸ்வாமியின் உத்தமமான திருக்குணங்களை அவரவர்கள் அநுபவித்து அறிய வேண்டுமே யொழிய அடியேனுடைய எழுத்திலிருந்து தெரிந்து கொள்வதில் சுவையில்லை. ஆனாலும் அடியேன் எழுதாமலிருக்க முடியாது. இவர் உத்யோகத்திலிருக்கும் போதே அடியேனுக்குப் பரிசிதர். பரமவைதிகரான விவர்க்கு லௌகிக உத்யோகத்திலிருப்பு எங்ஙனே பொருந்துகிறதென்று அடியேன் கவலை கொண்டதுண்டு. அப்போதே இந்த ஸ்வாமி உத்யோகத்தை விட்டு விலகிக் கொண்டார். க்ரமமான பென்ஷன் கிடைப்பதற்கு யோக்யமல்லாத காலத்தில் விலகிக் கொண்டபடியாலே சிறிதளவான பென்ஷன் தொகையே கிடைக்கும்படியாயிருந்தது. இருந்தாலும் அதில் பரம த்ருப்தி கொண்டவராய் ஸத்காலக்ஷேப நிரதராயினர். இயற்கையாகவே குடும்பயோக க்ஷேம நிர்வாஹத்திற்குப் பர்யாப்தமான உபபத்தியுடையவராதலால் பாகவதர்களை ஆராதிப்பதிலேயே அளவு கடந்த குதூஹலமுடையவராய் அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில் ஏகரீதியாக விளங்கி வருகிறார். இந்த ஸ்வாமி நமது நம்பிள்ளை ஸன்னிதிக்குச் செய்து போந்தவையும் செய்து வருகின்றவையுமான கிஞ்சித்காரங்கள் பல. பழுத்த பழமாக ஸேவை ஸாதித்து வருகின்ற இந்த ஸ்வாமி இவ்விபூதியில் இன்னமும் வெகு நாளைக்கு ஸேவை ஸாதித்துக் கொண்



ஸ்ரீமதுபயவே. K. ராமசந்திரய்யங்கார் ஸ்வாமி
தென்திருப்பேரை.

டிருக்கவேணும். ஸ்ரீவைஷ்ணவர் என்னும் வ்யபதேசத்திற்கு இந்த ஸ்வாமி ப்ரதமலக்ஷ்ய பூதர் என்பது அடியேனுடைய அபிஸந்தி.

பல ஸம்வத்ஸரங்கள் பம்பாய் மகாநகரத்தில் மிகச்சிறந்த உத்யோக பதவியை வஹித்துவந்த ஸ்ரீமதுபயவே வி. வி. ஐயங்கார் ஸ்வாமியையறியாத லௌகிகர்களும் வைதிகர்களும் மிகச்சிலரேயிருக்கக்கூடும். இந்த ஸ்வாமியின் நட்பு அடியேனுக்குப் பல ஸம்வத்ஸரங்களாகவுண்டு. இவர் பல ஸம்வத்ஸரங்கள் லௌகிக உத்யோகத்தில் அமர்ந்திருந்தவராயினும் இவரை நேரில் ஸேவிப்பவர்கள் இவரைப் பரம வைதிகோத்தமராகவே அறுதியிடுவர்கள். இங்கே திருவுருவப்படத்தில் எப்படி ஸேவை ஸாதிக்கிறாரோ அப்படியேதான் ஸதா ஸர்வதா ஸேவை ஸாதித்தருள்வர். சிலபேர்கள் போடோக்ராப் எடுப்பதற்காகத் தனிப்படக் கோலஞ் செய்து கொள்வதுண்டு; இந்த ஸ்வாமியின் திருக்கோலம் அங்ஙனே அமைந்ததன்று. ஸஹஜமான திருக்கோலமே யிது. பகலோடு இரவோடு வாசியற எக்காலத்திலும் இவ்வண்ணமாகவே ஸேவை ஸாதித்தருள்வர். நாலாயிர திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்களிலும், ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யங்களிலும், ஸ்ரீராமாயணாதிகளிலும் ப்ரவசந பர்யந்தமான ப்ராவீண்யமுடையவர். தினப்படியாகக் காலையிலும் இரவிலும் தம்முடைய ஆப்த ஸௌஹ்ருந்மணிகளுக்கு இந்த ஸத்க்ரந்தங்களை ப்ரவசநம் செய்துபோருமவர். இந்த ஸ்வாமி பாம்பே நகரத்தில் வஸித்த முப்பது வருஷ காலத்தில் இத்தகைய போதுபோக்கு இல்லாத நாள் தேறவேமாட்டாது. ஸகலோபசாரங்களுடனும் காலை மாலைகளில் பெருமாள் திருவாராதனம் செய்தருளும் பரிசு பரம விலக்ஷணமானது. அதிதி



ஸ்ரீமதுபயவே. வி. வி. ஐயங்கார் ஸ்வாமி.
கரியமாணிக்கம்.

ஸத்காரச் சிறப்போ அளவுகடந்தது. ஸாத்விகர்களை ஆராதிப்பதில் ஸ்வாபாவிகமான குதூஹலம் வாய்ந்தவர். பாம்பே மகா நகரத்தில் இந்த ஸ்வாமியை அடியேன் பத்தெட்டு பர்யாயம் ஸந்திக்க நேர்ந்ததுண்டு. "உலகிலேலந்து பெருஞ் செல்வத்தராய்த் திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே" என்று ஆழ்வாரருளிச் செய்த பலச்ருதி இந்த ஸ்வாமி பக்கலிலே பஹுமுகமாகப் பலித்திருக்கிறபடியைக் கண்டு மிகவுமுகந்தேன். நமது நம்பிள்ளை ஸன்னிதி திருப்ரதிஷ்டையானது முதலாக நம்பிள்ளையின் ப்ரதிமாஸ திருநக்ஷத்ர நிர்வாஹ கைங்கரியம் இந்த ஸ்வாமியினுடையதாக நடைபெற்று வருகிறது. இரண்டொரு வருஷகாலமாக இந்த ஸ்வாமி உத்யோகத்தில் நின்றும் விச்ராந்தராய், திருவரங்கம் பெரிய கோயிலுக்கு அருகேயுள்ள கரிய மாணிக்கமென்னும ஸ்வக்ராமத்திலே தேவேந்திர பவனமான தமது திருமாளிகையிலேயே நித்யவாஸமாயிருந்து கொண்டு அடிபணிந்தவர்களுக்கு ஸ்வரூபக்ரந்த ப்ரவசனமே செய்து போருகின்றார். ஸ்ரீகுலசேகராழ்வார் "இருமுப்பொழுதேத்தி எல்லை யில்லாத் தொன்னெறிக்கண் நிலை நின்ற தொண்டர்" என்று ஸாதித்தருளின பாசுரத்திற்கு இந்த ஸவாமியையே அடியேன் லக்ஷியமாகக் கருதியிருப்பது. இந்த ஸவாமிக்குத் திருத்தேவியார் வாய்த்திருக்குமழகைப் பற்றியும் அடியேன் இங்குச் சிறிது விஜ்ஞாபிக்க விரும்புகிறேன். "ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா" என்று திருவடி ப்ரசம்ஸித்த ப்ரசம்ஸை இங்குத்தான் மிகப்பொருத்தமானது. "நல்லபதத்தால் மனை வாழ்வர்" என்ற ஆழ்வாருடைய மங்களாசாஸனம் நன்கு பலித்திருக்கிறபடி. இவர்களுக்கு ஔரஸ புத்திரனில்லாததொரு குறையுண்டு. ஸஹோதரபுத்திரனை ஸ்வீகாரம் செய்து கொண்டு ஒருவாறு குறைதீரப் பெற்றது. அவனும் மேதாவியாய் *பிதுச் சதருணனென்னலாம் நிலைக்கு வரக் கூடியவனாய் விளங்கி வருகிறான்.



ஸ்ரீமான் M. V. நரஸிம்முலு நாயுடு
சென்னை க்ரௌன்டாக்கீஸ் ப்ரொப்ரைடர்.

சென்னைமாநகரில் ஜார்ஜ் டவுனில் சின்னதம்பி முதலித் தெருவில் வாழ்ந்து வரும் ஸ்ரீமான் M. V. நரசிம்முலு நாயுடுவை பக்தர்கள் யாவருமறிவர். இவர் வயதில் மிகச் சிறியவராயிருந்தும் அறிவிலும் ஆற்றலிலும் மிகப் பெரியவர். நெடுநாளாக நம்முடைய அன்புக்கு இலக்கானவர். பகவத் விஷயாதி ஸ்வரூப க்ரந்தங்களை நன்றாகக் கேட்டு அர்த்த விசேஷங்களைத் தரித்துக்கொண்டு மிருப்பவர். சென்னைமா நகரில் பலவாண்டுகள் எழுந்தருளியிருந்து சிங்கம் செட்டி யதீந்த்ர ப்ரவண செட்டி சாரிடியில் காலக்ஷேப க்ரந்தங்களை

ப்ரவசனம் செய்துகொண்டிருந்த வித்வச் சிகாமணியான ஸ்ரீமதித்யாதி. காரப்பங்காடு தேசி வரதாசார்ய ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்து அர்த்தங்கள் கேட்டு ஆஸ்திக்யம் பெற்றவர்களில் இவர் தலைவர். பரம்பரையாகவே தனவந்தர். க்ரவுன் டாக்கீஸ் நடத்தும் மூலமாகவும் தனிகர். உலகத்தில் தனிகர்கள் எண்ணிறந்தவர்களுளர். தர்ம ருசியுள்ள தனிகர்கள் மிகச் சிலரே யாவர். அன்னவர்களையே நாம் தனிகர்களென்று வழங்கத்தகும். இந்த நரசிம்முலு நாயுடு எனக்குத் தெரிந்து பல திவ்ய தேசங்களில் பல பல கைங்கரியங்களை மிகுந்த பக்தி ச்ரத்தையோடு, வெகு காலமாகச் செய்து வருகிறார். காஞ்சீபுரத்தில் தேவப்பெருமாள் ஸன்னிதி மணவாளமா முனிகள் சாத்துமுறை (இரவு) உபயத்தை வாசாமகோசரமான வைகரியில் நடத்தி வருபவர் இவர். திருவெஃகா ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் ஸன்னிதியில் பொய்கையாழ்வார் பிள்ளை லோகாசாரியர் சாத்துமுறை யுபயத்தையும், தையில் மகம் பைந்நாகம் பாய் சுருட்டி மஹோத்ஸவத்தையும் வெகு சிறப்பாக நடத்தி வருபவரும் இவரே. கூரத்தில் ஆழ்வான் சாத்துமுறை, மதுரமங்கலத்தில் எம்பார் சாத்துமுறை......என்றிப்படி பல முக்கியமான மஹோத்ஸவங்களை மிக வுயர்ந்த ரீதியில் நடத்தி வருபவரும் இவரே. தேவப்பெருமாள் திருவாராதனத்திற்கு தினப்படி சாலக்கிணற்றுத் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பிக்கும்படியான ஏற்பாடு செய்திருப்பவரும் இவரே. திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தானம், மயிலை ஸ்ரீகேசவப் பெருமாள் பேயாழ்வார் தேவஸ்தானம் முதலான ஸன்னிதிகளில் ட்ரஸ்டி பதவியிலும் அமர்ந்திருக்கிறாரிவர். நமது நம்பிள்ளை ஸன்னிதியில் தேசாந்தரிகளை ஆராதிக்கும் கைங்கரியமும் இவருடையதே. டம்பமில்லாமல் க்யாதி லாபங்களை விரும்பாமல் பாரமார்த்திக புத்தியோடு இவர் நடத்திவரும் கைங்கரியங்கள் அப்ரமேயமானவை. இவருடைய திடமான அத்யவஸாயத்திற்கு நித்ய ஸ்ரீர் நித்ய மங்கள மென்னத்தகும்.

சில வருஷங்களுக்கு முன்பு இவர் "ஸ்ரீராமாநுஜ மிஷின்" என்னும் பெயரால் ஒரு உபந்யாஸ பரிஷத்தை ஸ்தாபித்து அதன் மூலமாக அடிக்கடி பல ப்ராந்தங்களில் தகுந்த அதிகாரிகளைக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவ சமய தத்துவங்களை ப்ரஸங்கம் செய்வித்து மதப்ரசாரத்தை வெகு ஊக்கத்துடன் செய்து வருகிறார். இதில் மற்றும் பல அபிமானிகளும் ஒத்துழைத்தால் இம் முயற்சி விரைவில் விசேஷ பலனை யளிக்கும். ... ... *



ஸ்ரீ மதுபயவே. பிரதிவாதி பயங்கரம்.
அண்ணன் கோவிந்தாசாரியர் ஸ்வாமி
கூடாலே. (கோதாவரி)



ஸ்ரீ மதுபயவே. கோ. கம். திருமலாசார்ய
ஸ்வாமி. வேணீமாதவமந்திரம்.
பிரயாகை. (கீடகஞ்ஜ்)

கோதாவரீ தீரத்தில் பல அக்ரஹாரங்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் 'கூடால' (Gutala) என்பது அபிஜாதர்கள் பரம்பரையாக வாழுமிடமான மிகச்சிறந்த அக்ரஹாரம். இவ்விடத்தில் ப்ரதிவாதி பயங்கரவம்சஸ்தர்கள் நெடுநாளாக வாழ்ந்து வருகிறூர்கள். இவர்களுக்கு ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதியிலும் தீர்த்த மர்யாதை யுண்டு. இத்திருவம்சஸ்தர்களில் (கீர்த்தி மூர்த்தியான) அண்ணன் கோவிந்தாசார்ய ரென்கிற மஹான் ப்ரஸித்தராயும் வியாபகராயு மெழுந்

[P.T.O.]

வட நாட்டில் ப்ரயாக க்ஷேத்திரம் மிகப்ரஸித்தமானது, "கங்காயமுநயோர் மத்யே யத்ர குப்தா ஸரஸ்வதீ" என்கிறபடியே த்ரிவேணீ ஸங்கமத்தினுல் மிகப் புனிதமான க்ஷேத்ரம் ப்ரயாக க்ஷேத்ரம். அலஹாபாத் என்று லௌகிக நாமத்தினுல் வழங்கப்படும் தலமிதுவே. இங்கே தாராகஞ் ஜென்றும், கீடகஞ் சென்றும் பல சாகாபேதங்களுள்ளன. சுத்தயமுநாநதியின் பரிஸரத்திலுள்ள கீடகஞ்ஜில் வேணீமாதவ மந்திர மென்பது ப்ரஸித்தமான ஸ்தலம். ஸ்ரீபெரும்பூதூரில் வாழ்ந்து கொண்டிருந்த சில மஹா புருஷர்கள் பலவாண்டுகட்கு

தருளி யிருந்தார். அவருடைய திரு நாமத்தையே பூண்ட அவரது திருப்பேரனர் இப்போது அந்த அக்ரஹாரத்தில் ஸரஸ்வதீகடாக்ஷத்தையும் லக்ஷ்மீகடாக்ஷத்தையும் நன்கு பெற்று ஸ்ப்ருஹணீய குணகண நிதியாய் விளங்கி வருகிறார். இந்த ஸ்வாமியும், இவருடைய பக்கத்திலே ஸேவை ஸாதிக்கும் ப்ரயாகை ஸ்வாமியும் அடியேனுடைய ஆப்தர்களில் சிறந்தவர்கள்.

முன்பு இவ்விடத்திலே ஸ்தானசார்யர்களாக எழுந்தருளச் செய்யப்பட்டனர். அவர்களுள் இப்போது விளங்கும் ஸ்வாமி ஸ்ரீமத் திருமலாசார்யர். இவர் ஸ்ரீபெரும்பூதூரில் ஸாஹித்ய சாஸ்த்ரங்கள் வாசித்து சிஷ்ய ஸம்பத்தியோடு இங்கே வாழ்பவர். தென்னட்டிலிருந்து வடநாட்டுத் திருப்பதி யாத்திரை செல்பவர்களுக்கு இவருடைய மந்திரத்தில் வஸதி ஸௌகரியமுண்டு.

அடியேனுடைய குடும்ப யோக க்ஷேம விஜ்ஞாபநம்.

அடியேனுக்கு இரண்டு குமாரிகள் மட்டும் பிறந்து வாழ்கின்றனர். கநிஷ்ட குமாரிக்கு இரு குமாரர்களும் ஒரு குமாரியும்; பிறகு ஜ்யேஷ்ட குமாரிக்கு இரு



— ஸ்வீக்ருதபுத்ரேண ஸஹ —

குமாரிகளும் ஒரு குமாரனும் ஜனித்திருக்கின்றனர். ஜ்யேஷ்ட ஜாமாதாவைப்பற்றி பக்கம் 256ல் ப்ரஸ்தாவித்திருக்கிறேன். கநிஷ்ட ஜாமாதாவைப் பற்றிக் கீழ் இரண்டாம் பகுதியில் பக்கம் 107ல் "ஸ்ரீமான் மணவாள. திருமலாசாரியர்" என்று தொடங்கியுள்ள பாராவில் ப்ரஸ்தாவித்திருக்கிறேன். அவருடைய புதல்வனை சிரஞ்சீவி. செல்வமணி யென்னும் ஸ்ரீரங்கநாதனைப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு புத்ர ஸ்வீகாரம் செய்துகொண்டேன். அவனுக்கு மாமனாராக வாய்த்திருக்கின்ற ஆழ்வார் திருநகரி ஸ்ரீமதுபயவே. இளையவில்லி. சடகோபாசார்ய ஸ்வாமியின் பெருமைகளைக் கீழ் இரண்டாம் பகுதியில் பக்கம் 116லும், முதற்பகுதியில் பக்கம் 41லும்

வெளியிட்டிருக்கிறேன். அடியேனுக்குப் பித்ரு பிதாமஹ பரம்பராப்ராப்தமாயிருந்த க்ராமபூமி தென்னாற்காட்டு ஜில்லாவில் திருவடி ராயபுரமென்னும் சுரோத்திரியமாயிருந்தது. இது நபாபு காலத்தில் பண்டித ஸன்மானமாகப் பெரியோர்களுக்குக் கிடைத்ததாம். பித்ரு பிதாமஹாதிகள் இந்த க்ராம வருமானத்தைக் கொண்டே பெருமாள் திருவாராதனம் நடத்தி வந்தார்கள். அடியேன் காலத்திலும் ஐம்பத்தைந்து பிராயம் வரையிலும் இந்த க்ராமமே குடும்ப நிர்வாஹகமாயிருந்துவந்தது. ஸர்க்கார் ஜமீன்களையெல்லாம் ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள ஆரம்பித்தது எங்கும் ப்ரஸித்தமேயன்றோ. அக்காலத்தில் இந்த நமது க்ராமத்தையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்கள். இதற்காகச் சிறிது தொகை செலுத்தியுள்ளார்கள்; இனிமேலும் சிறிது தொகை செலுத்தக்கூடும். முக்கியமாக சிஷ்யர்களின் ஆதரவே ஆதாரமாக இருந்து வருகிறது. குடும்ப நிர்வாஹம் தவிர மூன்று வகைகளில் அடியேனுடைய தார்மிககார்ய நிர்வாஹங்கள் நடைபெற்று வருகின்றன. (1) வேத வேதாந்த வைஜயந்தீ வித்யாநிலய நிர்வாஹம். (2) நம்பிள்ளை ஸன்னிதி நிர்வாஹம். (3) க்ரந்தமாலா கார்யாலய நிர்வாஹம். இவை தவிர வேறு நிர்வாஹங்களும் அநியதமாய் ஸமயாநுகுணமாக ப்ராப்தங்களாகுமாகிலும் இவை மூன்றும் நியதங்கள். இவற்றை எம்பெருமான் நிர்வஹித்துக்கொண்டு போகும் விதம் அடியேனுக்கே அபரிமிதமான விஸ்மயத்தைத் தருகின்றது.

பெரியாழ்வார் எம்பெருமானை நோக்கி ஒரு பாசுரமருளிச் செய்தார்—*நெடுமையாலுலகேழு மளந்தாய் நின்மலா நெடியாய்! அடியேனைக் குடிமை கொள்வதற்கு ஐயுறவேண்டா கூறை சோறிவை வேண்டுவதில்லை, அடிமை யென்னும் அக்கோயின்மையாலே அங்கங்கே யவை போதரும் கண்டாய் * என்று. இப்பாசுரத்தின் திவ்யார்த்த தீபிகை யுரையிலே அடியேன் எழுதியுள்ளவற்றை அப்படியே இங்கு அநுவதிக்கிறேன். "த்ரிவிக்ரமாபதாநத்தில் அனைவரையும் அடிமை கொண்ட நீ அடியேனையும் அடிமைகொள்ளவேணுமென்று ஆழ்வார் ப்ரார்த்திக்க, அதற்கு எம்பெருமான் 'உம்முடைய ஸ்வரூபத்தி னுண்மை எனக்கு விளங்கவில்லையே' என்ன; அதற்கு ஆழ்வார் 'அடியேனுக்கு ஸ்வாதந்த்ரியமும் ஸ்வப்ரயோஜநபரத்வமும் உண்டென்று நீ ஸங்தேஹிக்கவே வேண்டா; அடியேன் அநந்யப்ரயோஜநன்' என்ன; அதுகேட்டு எம்பெருமான் 'நீர் அநந்யப்ரயோஜநனென்றால் அதை நான் எங்ஙனே எற்றுக் கொள்வேன்? நீர் தேஹமுடையவரன்றோ? அத்தேஹத்திற்குத் தாரகமாயுள்ளவற்றில் உமக்கு விருப்பமில்லாமற் போகுமோ?' என்ன; அதற்கு ஆழ்வார் 'தேஹதாரகமான சோறு கூறை முதலியவற்றை நான் உன்னிடத்துப் பெற விரும்புகிறிலேன்' என்ன; 'ஆகில் அவை பெறுவதற்காகச் சில அரசர்களைத் தேடியோடுகிறீரோ?' என்று எம்பெருமான் கேட்க, அதற்கு ஆழ்வார் 'அவற்றை நான் அபேக்ஷித்துப் பெறவேண்டிய அருமையில்லை; அவற்றுக்காக க்ஷுத்ரர்களைத் தேடி நான் ஓடவேண்டியதில்லை; உனக்கு நான் அடிமைப்பட்டவ னென்கிற சிறப்பு என்னிடத்துள்ள தாதலால் ஆங்காங்கு அவரவர்கள் தாமாகவே என்னை யழைத்து அவற்றைத் தந்திடுவர்கள்; ஆகவே நான் பிரயோஜநாந்தரத்தை நச்சித் திரிபவனல்லேன்; அநந்யப்ரயோஜநனே; அடியேனை நிஸ்ஸந்தேஹமாக அடிமை கொண்டருள வேணும்' என்பதாய்ச் செல்லுகிறது இப்பாட்டு." என்று. இங்ஙனே பெரியாழ்வார் திருவுள்ளம்பற்றின அத்யவஸாயம் அடியேனுக்கு மிக்க இளமையில் தோன்றியது. அடியேன் பதினாறுவது பிராயத்தில் ஹைதராபாத் நகரத்தில் ஸீதாராம் பாக் என்னுமிடத்தில் ஸ்ரீகாதிஸ்வாமியோடு கூடச் சில மாதங்கள் வஸிக்க நேர்ந்ததைக் கீழ் முதற் பகுதியில் பக்கம் 28ல் விரிவாக எழுதியிருக்கின்றேன். அப்போது அந்த நகரத்தில் மிகப் பெரிய மதிப்போடு பிரபல அட்வகேட்டாக வாழ்பவர் ஸ்ரீ உவே. S. ஆராவமுதய்யங்கா ரென்பவர். இந்த மஹான்

இற்றைக்கும் பாங்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த ஸ்வாமி லௌகிக வைதிகங்களில் மஹாசதுரர். ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தியும் நன்றாகப் படைத்தவர். அடியேனுடைய பதினாறவது வயதில் இந்த ஸ்வாமிக்கு முப்பது வயதுக்கு மேலிருக்கும். அப்போது இந்த மஹான் ஸமயவிசேஷங்களில் ஸ்ரீ காதிஸ்வாமி ஸன்னிதிக்கு வருவராதலால் வருகிற போதெல்லாம் அடியேனோடு பரமப் ரீதராய் வார்த்தையாடிப் போவர். ஒருஸமயம் வார்த்தையாடுகையில், கீழே விவரித்த பெரியாழ்வார் பாசுரத்தையெடுத்து விவரித்து ஒரு உபந் யாஸம்போலவே விஜ்ஞாபனம் செய்து கொண்டேன். உண்மையில் பரமரஸிகரான இந்த ஸ்வாமி அந்தப் பாசுரத்தின் பொருளிலே மிகவும் ரஸித்து அந்தப் பாசுரத்தையும் தமது நோட்புக்கில் குறித்துக் கொண்டார். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட செய்தி இது. "அடிமையென்னும் அக்கோயின் மையாலே அங்ஙங்கேயவை போதருங் கண்டாய்" என்ற இப்பாசுரம் நாலாயிர திவ்யப்ரபந்தப் பாசுரங்களில் அத் விதீயமானது. சிலசில அர்த்தவிசேஷங்களை ஒரு ஆழ்வார்போலே மற்றுஞ் சில ஆழ்வார்களும் ஸாதிப்பதுண்டே; இவ்வர்த்தம் இவ்வாழ்வாரொருவரால்தான் அருளிச்செய்யப் பட்டுள்ளது. ஒருவனுக்கு பகவத் ப்ரத்யாஸத்தி பாரமார்த்திகமாக இருக்குமானல் அந்த ப்ரத்யாஸத்தியின் ப்ரபாவத்தாலே அவரவர்கள் தாமாக மேல்விழுந்து கிஞ்சித் கரிக்கப்பெறுவர்கள் என்னுமிந்த விசேஷத்தைப் பெரியாழ்வார் ஸ்வாநுபவத்திலே கண்டு அருளிச் செய்தாரோ? அல்லது சாஸ்த்ரார்த்த மென்றருளிச் செய்தாரோ? அறியேன். ஸ்வாநுபவத்தில் கண்டிருக்கவுங்கூடும். இந்தப் பாசுரம் அடியேனுக்கு ஏழெட்டு பிராயத்தில் கண்ட பாடமாகப்பெற்றது. திருத்தகப்பனர் ஒவ்வொரு நாளில் ஒவ்வொரு பாசுரத்தின் விசேஷத்தை யெடுத்துரைக்கிற முறையிலே இப்பாசுரத்தின் அர்த்தத்தையும் மிக்க இளமையிலேயே நெஞ்சிற்பதியவைத்தருளினர். அதை அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில் அடியேன் ஸ்வாநுபவத்திலே காணும் விதம் *நெஞ்சால் நினைப்பரிதால்* என்னுமித்தனை.



ஸ்ரீமான். திவான்பஹதூர்.
S. ஆராவமுதய்யங்கார். ஹைதராபாத்.

40. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம்—உரையுடன். ஸ்ரீபராசரபட்டாருளிச் செய்த பகவத் குண தர்ப்பணமெனனும் பாஷ்யத்தைத் தழுவி ஸாரஸம்க்ஷேபமாக எழுதப்பட்டது இவ்வுரை. ஒவ்வொரு திருநாமத்தின் தாற்பரியத்தையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள உதவுமிது. 1—0—0.